விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 10 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 19 செவ்வாய்க்கிழமை (03.07.2012) | பக்கங்கள்: பதினாறு

திங்கள் முதல் வெள்ளிவரை 'தமிழ் நாதம்' உங்கள் கைகளில்...

## 24 மணித்தியாலங்களுக்குள் 4 அகதிப் படகுகள் கிறிஸ்மஸ் தீவில்

கிறிஸ்மஸ்தீவின் சிறுகுடாவின் கரைக்கு அண்மையில் பெருமளவு ஆண்களுடன் 39 பேரை ஏற்றிவந்த மிகவும் பழைய மீன்பிடிப் படகொன்று தற்போது நங்கூரமிட்டுள்ளது. இப்படகில் 5 கடற்படையினரும் காணப்படுகின்றனர்.

இப்படகிலிருந்தவர்கள் இன்று காலை தமது படகில் நின்றவாறு கைகளை அசைத்துக் கொண்டு புன்னகையுடன் கர்ணப்பட்டனர்.

இவர்கள் வந்த படகு முதல் நாள் இரவு வழிமறிக்கப்பட்டு கிறிஸ்மஸ்தீவின் சிறு வளைகுடாவில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இவர்களை கரைக்கு கொண்டு வந்து கிறிஸ்மஸ்தீவிலுள்ள முகாம்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த வியாழக்கிழமை இரவிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் வந்த 4 படகுகளில் இது கடைசியாக வந்த படகாகும் 53 இலங்கையர்களுடன் வந்த இன்னுமொரு படகு பிளையிங் பிஷ் வளைகுடாவுக்கு கொண்டுவரப்பட்டது. இது மட்டுமன்றி நேற்றுமுன்தினம்

02

நயினை நாகபூஷணி அம்பாள் தேர்த் திருவிழா உற்சவம்



# நில அபகரிப்பு பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டும்

### - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தல்

"நில அபகரிப்பு தொடர்பான பிரச்சினைகள் பேசி தீர்க்கப்பட வேண்டும். அத்தோடு இந்த பிரச்சினையை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். பிழையானவர்கள் கைகளுக்கு இந்த விடயம் போகக் கூடாது" என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற 2,039 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"நிலம் தொடர்பான பிரச்சினைகளில் உண்மையிருக்கிறது. ஆனால் இப் பிரச்சினைகள் பிழையான-வர்களின் கைகளுக்கு சென்று கடந்த காலங்களை போன்று மாறி விடக் கூடாது.

இந்த வரலாற்று ரீதியான சந்தர்ப்பத்தை சரியாக உங்கள் சமூகத்திற்கு பயன்படுத்தி நீங்கள் பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டும். இந்த நியமனங்கள் வழங்குகையில் பாரபட்சம் காட்டப்படவில்லை" என்றார்.

02

## கொழும்பு பல்கலை மாணவன் யாழில் மரணம்

கொழும்புப் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் காலமானார். உடுப்பிட்டி, இமையாணன் பகுதியைச் சேர்ந்த தவபாலன் கிரிதரன் என்ற 22 வயது இளைஞரே காலமானவராவார். கொழும்பு பல்கலைக் கழக கணினி விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருட மாணவர் இவர். கொழும்பில் தங்கியிருந்த போது டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட இவர், கடந்த 26 ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

02

## எயிட்ஸ் நோய்க்கு இதுவரை ஒன்பது பேர் பலி




வருடத்தின் இதுவரையான காலத்தில் எச்.ஐ.வி. எயிட்ஸ் தொற்றுக்குள்ளான ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இதுவரை நாட்டில் எயிட்ஸ் தொற்றுக்குள்ளான ஆயிரத்து 350 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக எயிட்ஸ் ஒழிப்பு மற்றும் தேசிய பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் நிமல் எதிரிசிங்க குறிப்பிட்டார்.

ஆயினும் நாட்டில் இதுவரை 3500 எய்ட்ஸ் நோயாளிகள்

02

## தயா, ஜோர்ஜ் மாஸ்டர்கள் மீதான நடவடிக்கை குறித்து முடிவில்லை

பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள புலிகள் இயக்கத்தின் ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றிய வேலாயுதம் தயாநிதி எனப்படும் தயா மாஸ்டர் மற்றும் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய வேலுப்பிள்ளை குமார் பஞ்சவர்ணம் எனப்படும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகிய சந்தேகநபர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கப்பெறவில்லை என இரகசிய பொலிஸார் கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலியிடம் அறிவித்துள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் குறித்து விசாரணை நடத்தி அதன் அறிக்கை 2011 ஏப்ரல் 20ஆம் திகதி சட்ட மா அதிபரிடம் சமர்பிக்கப்பட்டதாக இரகசிய பொலிஸார் நேற்று நீதிமன்றில் கூறினார்.

எனினும் சந்தேகநபர்கள் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட மா அதிபர் இதுவரை ஆலோசனை

02

## யாழில் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை HNDA மற்றும் HNDM பட்டத்தினை பூர்த்தி செய்த பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் இடம்பெற்றுக் கொண்டிந்த வேளை, இவர்களின் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

தாங்கள் பெற்ற பட்டம் பொய்யானதா?, பட்டங்களை பெற்ற பட்டதாரிகளின் எதிர்காலம் என்ன?, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சான்றிதழின் பெறுமதி இது தானா?..



பொது நிர்வாக அமைச்சின் 46(90) இலக்க சுற்று நிருபம் வெறும் காகிதமா, பட்டதாரிகளுக்கு சமமான எம்மை புறக்கணிப்பது ஏன் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களைச்

02

## மாற்றுப் பாதையில் சேதுசமுத்திர திட்டம் சாத்தியமில்லை

### மத்திய அரசு விளக்கம்

இராமர் பாலம் தவிர்த்து மற்ற மாற்றுப்பாதையில் சேது சமுத்திர திட்டம் சாத்தியமில்லை என்று உயர்நீதிமன்றத்துக்கு மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் முதலாவது ஐந்தாண்டு ஆட்சி காலத்தில் சேது சமுத்திர திட்டம் மேற்கொள்ள திட்டமிட்டு பணிகள் தொடங்கின. இந்நிலையில், இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் புராதன சிறப்புமிக்க ராமர் பாலம் பாதிக்கப்படும் என்றும், ராமர் பாலத்தை தேசிய நினைவு சின்னமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி வழக்கு தொடர்ந்தார். இதனையடுத்து நீதிமன்ற உத்தரவுப்படி, சேதுசமுத்திர திட்ட பணிகள் நிறுத்தப்பட்டன.

இந்நிலையில், சேது சமுத்திர திட்டம் குறித்த வழக்கு, நீதிபதி சந்திரமௌலி தலைமையில் நேற்று

02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்க வேண்டாம் - பெப்ரல் அமைப்பு

குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்க வேண்டாம் என இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பெபரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், போதைப் பொருள் வர்த்தகம், குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் சந்தர்ப்பம் அளிக்க வேண்டாம் என நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் பெப்ரல் கோரியுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யும் மக்களும் பொறுப் புணர்ச்சியுடன் செயற்பட வேண்டுமென பெப்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

கல்வித் தகைமை, அரசியல் நோக்கம், நன்னடத்தை மற்றும் சமூக அந்தஸ்து ஆகிய காரணிகளை கருத்திற் கொண்டு மக்கள் வாக்களிக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



கொழும்பில் நேற்று காலை வீசிய "டோர்க்நாடோ" சுழற்காற்றின் காரணமாக பம்பலப்பிட்டி சகாரா வீதியிலுள்ள பல வீடுகள் மற்றும் கட்டங்கள் சேதமடைந்தன. சேதமடைந்த வீடு ஒன்றைப் படத்தில் காணலாம்.

## 2039 யாழ்.பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற 2,039 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வழங்கி வைத்தார்.

கடந்த ஜூன் மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியோரில், 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவர்களுக்கே இதன்போது நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ். அமைப்பளர் தங்கராஜா , யாழ். மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நில அபகரிப்பு பிரச்சினைகள்...(தொடர்)

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற 2,039 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்.

கடந்த ஜூன் மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியோரில், 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவர்களுக்கே இதன்போது நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாநாகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ். அமைப்பளர் தங்கராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.


## பிறந்தநாள் வாழ்த்து, மரண அறிவித்தல்கள்

**இலவசமாக பிரசுரிக்கப்படும்!**

பிறந்தநாள் வாழ்த்துக்கள் மற்றும் மரண அறிவித்தல்கள் இன்றிலிருந்து ஒரு மாதத்துக்கு 'தமிழ்நாதம் பத்திரிகையில்' இலவசமாகப் பிரசுரிக்கப்படும். புகைப்படத்துடன் இவற்றை அனுப்பலாம். ஆனால் உரிய உறுதிப்படுத்தப்பட்ட பத்திரங்களுடன் அனுப்பிவைக்கப்படும் அறிவித்தல்களே பிரசுரமாகும். உங்கள் பிரதேச கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்டு விவரங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

பிரதம ஆசிரியர்:
"தமிழ்நாதம்"
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்


## யாழ்.நகரில் சுவரொட்டிகள் ஒட்ட 25 முக்கிய இடங்கள்

யாழ்.நகரின் முக்கிய பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் எந்தவிதமான விதிமுறைகளுமின்றி தம் எண்ணப்படி கண்ட இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டி நகரின் அழகுக்கு மாசு ஏற்படுத்துகின்றனர். இதனைத் தவிர்க்கும் முகமாக இனங்காணப்பட்ட 25 முக்கிய இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்விடங்களில் சுவரொட்டி விளம்பரங்களைக் காட்சிப் படுத்த விரும்புபவர்கள் யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியினருடன் தொடர்புகொண்டு, அனுமதி பெற்று இது சம்பந்தமான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## மாற்றுப்...(தொடர்)

விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு தரப்பில் வழக்கறிஞர் நாரிமன் தெரிவித்துள்ளதாவது, பச்சோரி தாக்கல் செய்த அறிக்கை குறித்து இதுவரை ஆய்வு மேற்கொள்ளவில்லை என்றும், இதுகுறித்து ஆராய மேலும் அவகாசம் வேண்டும் என்று கூறினார். பச்சோரியின் அறிக்கையில் இத்திட்டத்தை மாற்றுவழிப் பாதையில் செயல்படுத்துவது சாத்தியமில்லை என்றும், இதனால் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று மத்திய அரசு, உயர்நீதிமன்றம் விளக்கம் அளித்துள்ளது.

## தயா,... (தொடர்)

வழங்கவில்லை என இரகசிய பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2009 ஏப்ரல் 23ஆம் திகதி ஓமந்தை சோதனைச்சாவடி வழியாக இவ்விரு சந்தேகநபர்களும் இராணுவத்தினரிடம் சரணடைந்த, பின், விசாரணைகளுக்காக இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை விரைவில் பெற்று அறிக்கை சமர்பிக்குமாறு பணித்த கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி, வழக்கை எதிர்வரும் நவம்பர் 26ம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

## யாழில்...(தொடர்)

சந்தித்து அவர்களின் கோரிக்கையைச் செவிமெடுத்த அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, பிரச்சினை தொடர்பாக அமைச்சரவையில் தீர்மானங்களை எடுத்து இவர்களுக்கான நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.



தமது அடிப்படைத்தேவைகளை வவுனியா நகரசபை ஏற்படுத்தி தரவேண்டுமென கோரி நகரசபையின் சுகாதார ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்: (படங்கள்: வவுனியா)

## துப்பாக்கி சூடும் போட்டியில் முன்னாள் போராளி பங்கேற்பு

புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் தற்போது இலங்கையின் தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

விஜயன் என்ற இந்த முன்னாள் உறுப்பினர், இலங்கை இராணுவத்துக்கு எதிராக பல சண்டைகளில் ஈடுபட்டவராவார்.

புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ள புலிகளின் முன்னாள் போராளிகளில் 131 பேர் இலங்கையின் தேசிய விளையாட்டுக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் குறி பார்த்து துப்பாக்கி சுடும் பயிற்சியை பெற்று வரும் விஜயன் தாம் தற்போது துப்பாக்கி சுடுவதில் தொழில்நுட்பங்களை கற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனை தவிர, 12 புலிகள், கரப்பந்தாட்டம், கிரிக்கெட், கபடி, கால்பந்தாட்டம், நீச்சல் போன்ற விளையாட்டுத்துறைகளிலும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக சீன செய்திசேவை தெரிவித்துள்ளது.

## எயிட்ஸ்...(தொடர்)

இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எயிட்ஸ் தொற்றுக்குள்ளாவதை தடுப்பது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் செயற்றிட்டம் நாட்டில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாக விசேட வைத்தியர் நிமல் எதிரிசிங்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொழும்பு... (தொடர்)

மேலதிக சிகிச்சைக்காக மறுநாள் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

குருதிப் பெருக்கு அதிகம் ஏற்பட்டதால் சிகிச்சை பலனின்றி கடந்த முதலாம் திகதி காலமானார்.

## நாளை முதல் தென்மராட்சி வலய ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

தென்மராட்சி வலயத்துக் குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான "மகிழ்ச்சியான வாழ்வு - தொடர் நூல்" கருத்தரங்கானது எதிர்வரும் 4,5,6ஆம் திகதிகளில் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

04.07.2012 (புதன்கிழமை) ஆரம்ப பிரிவு ஆசிரியர்களில் ஒருவரையும்,

05.07.2012 (வியாழக்கிழமை) வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் சம்பந்தமான பாட ஆசிரியர் ஒருவரையும்

06.07.2012 (வெள்ளிக்கிழமை) வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் தொடர்பான ஒரு ஆசிரியரும் கருத்தரங்கில் கலந்து கொள்வர்.

இவ் ஒழுங்கில் ஆசிரியர்களை இக்கருத்தரங்கிற்கு அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கு வலய கல்விப் பணிப்பாளர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## 24 மணித்தியாலங்களுக்குள்....(தொடர்)

67 இலங்கையர்கள் கிறிஸ்மஸ் தீவின் விமான நிலையத்தில் வந்திறங்கினர். கடந்த வெள்ளிக்கிழமை கொகோஸ்தீவைச் சென்றடைந்த இவர்கள் விமானம் மூலம் கிறிஸ்மஸ்தீவுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதேவேளை, இனங்காணப்படாத 41 பேரை ஏற்றிவரும் இன்னுமொரு படகு வெள்ளிக்கிழமை ஆஷ்மோர் தீவுகளில் வழிமறிக்கப்பட்டு கிறிஸ்மஸ்தீவுக்கு அழைத்து வரப்படுகின்றது.

கடந்த வாரம் புகலிடம் கோருவோரை ஏற்றிவந்த படகில் ஒரு இலங்கையர் பொக்களிப்பான் நோயால் பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுகாதார அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேவையேற்படின் இவ்வாறானவர்களை பிரித்துவைத்து சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைத் திணைக்களம் கூறியுள்ளது.


## இன்றைய இராசிபலன் (03.07.2012)

நந்தன வருடம் ஆனி திங்கள் 19 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: மூலம் மாலை 05.02 வரை அதன்பின் பூராடம்
திதி: பூரணை பின்னிரவு 01.03.வரை. அதன் பின் பிரதமை.
சுபநேரம்: 10.27 - 11.57 இராகுகாலம் 2.57 - 4.27
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்:** அலைச்சல், செலவினம், போசனக் குறைவு.
**இடபம்:** பொருள் இழப்பு, வாகன சுகம் குறைவு, பிரயாணக் கஷ்டம்
**மிதுனம்:** பொருள் இலாபம், அந்நியர் உதவி, இனசனக் கொண்டாட்டம்.
**கடகம்:** சந்தோஷமிகுதி, புத்திர சுகம், நற்செய்தி.
**சிங்கம்:** ஏமாற்றம், குடும்பச் சச்சரவு கடன்படல்.
**கன்னி:** வயிற்று ரோகம், போசன சுகக் குறைவு, புத்திரரால் கவலை.
**துலாம்:** பொருள் இலாபம், குடும்ப மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம்.
**விருட்ச்சிகம்:** பொருள் நஷ்டம், கடன் தொல்லை, வீண் வாக்குவாதம்.
**தனுசு:** தேக ஆரோக்கியம், பொருள் உதவி, வாக்குச் சித்தி.
**மகரம்:** பிரயாணக் கஷ்டம், உடல்சோர்வு, அகால போசனம்.
**கும்பம்:** எதிர்பாராத வரவு, தெய்வ அனுகூலம், இல்ல மகிழ்ச்சி.
**மீனம்:** தொழில் வகையில் சஞ்சலம், அமைதியின்மை இடமாற்றம்.

- ஜோதிடர் பால.இரத்தினசேகர் -

# சந்தேக நபர்களுக்குப் பதில் உறவினர்களை விசாரணைக்கு அழைத்துச் செல்வது மனித உரிமை மீறல்



## - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர்

சந்தேக நபரொருவரைக் கைது செய்ய முடியவில்லை என்பதற்காக அந்நபரின் குடும்பத்தினரையோ, உறவினர்களையோ பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதானது மனித உரிமை மீறும் செயல் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டச் செயலாளரான சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.

மனித உரிமைகள் அமைப்பின் நான்காவது வருடாந்த மாநாடு கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இம்மாநாட்டில் விசேட பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைப்பின் தலைவர் கலாநிதி எம்.என்.எம்.அஸீம் தலைமையில் மாநாடு நடைபெற்றது. சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தொடர்ந்து உரையாற்றுகையில்:

நாம் இலங்கைப் பிரஜைகள் மாத்திரமல்லர், மாறாக உலக மக்களுமாவர். எந்தவொரு நாடும் தான் நினைத்தபடி தம் நாட்டு மக்களை நடத்த முடியாது. 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் திகதி அறிவிக்கப்பட்ட மனித உரிமைப் பிரகடனம் இதற்குப் பாரிய பங்களிப்பு செய்துள்ளது. இந்தப் பிரகடனம் 30 சரத்துக்களைக் கொண்டிருக்கின்றது. இதில் இற்றைவரை 193 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. இந்தப் பிரகடனத்தில் இலங்கை 1953 ஆம் ஆண்டில் கைச்சாத்திட்டது. ஐக்கிய நாடுகள் சபை 1948 ஆம் ஆண்டு முதல் இற்றைவரையும் 16 முக்கிய பிரகடனங்களை முன் வைத்திருக்கின்றது. அந்த எல்லாப் பிரகடனங்களையும் இலங்கை ஏற்றுக் கைச்சாத்திட்டிருக்கின்றது. அவற்றில் சமய, கலாசார, பொருளாதார உரிமைகள் பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பிரகடனம், பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரகடனம், குரூர சித்திரவதைகள் தவிர்ப்பதற்கான பிரகடனம் என்பன குறிப்பிடத்தக்கவை.

இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள எல்லாப் பிரகடனங்களும் பாராளுமன்றத்தின் ஊடாக சட்டமாக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் நிறுவனக் கட்டமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில்தான் நாட்டிலுள்ள எல்லாப் பொலிஸ் நிலையங்களிலும் மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதே நேரம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் சிறுவர் அபிவிருத்தி அதிகாரியும் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளார். மனித உரிமை ஆணைக்குழு அமைக்கப்பட்டிருக்கின்றது.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் பலவிதமான நடவடிக்கைகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வகையில் இந்நாட்டின் சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் சந்தேக நபரொருவரைக் கைது செய்ய முடியவில்லை என்பதற்காக அவரது குடும்பத்தினரையோ, உறவினர்களையோ பொலிஸிக்கு அழைத்துச் செல்ல முடியாது. அவ்வாறு செய்வதும் மனித உரிமை மீறல் செயலே என்றார்.

இந்நிகழ்வில் பிரதமரின் பொது சனத் தொடர்பு அதிகாரி தர்ம சேன, பாதுகாப்பு அமைச்சரின் இணைப்பு செயலாளர் லெஸ்லி ரூபசிங்க உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டார்கள்.

## 32 ஆயிரம் சனத்தொகை கொண்ட குட்டி நாட்டுடன் இலங்கை இராஜதந்திர உறவு

சுமார் 32 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட குட்டி ஐரோப்பியக் குடியரசு நாடொன்றுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவுள்ளது.

சான்மரினோ குடியரசு இப்படி பெயர்கொண்ட குட்டி நாட்டின் சரியான சனத்தொகை 32,140 பேர் மட்டுமே இந்த நாட்டின் சனத்தொகையைவிட எமது யாழ்ப்பாண தீவகத்தின் சனத்தொகை கிட்டத்தட்ட இருபது மடங்குகள் அதிகம். இருந்தாலும் இந்தக் குட்டி நாட்டுக்கு வருடந்தோறும் 35 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகிறார்களாம்.

ஆனால் இதுவொரு ஜன நாயக நாடு. சின்னஞ்சிறிய நாடுதான் என்றாலும் மிகப்பழமை வாய்ந்த எழுதப்பட்ட அரசியல் யாப்பைக் கொண்டது. கி.பி. 1600 ஆம் ஆண்டு இந்த அரசியல் யாப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சான்மரினோ குடியரசு மத்திய இத்தாலிக்கு அண்மையில் அமைந்திருக்கிறது. குட்டிக் குடியரசானது என்றாலும் இந்த நாடு ஐரோப்பாவிலேயே செல்வம் கொழிக்கும் நாடுகளில் ஒன்று. இந்த நாட்டு மக்களின் தனிநபர் வருமானம் என்ன தெரியுமா? 37,830 அமெரிக்க டொலர்கள். இலங்கை பெறுமதியில் 45 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம்.

இந்தக் குட்டி நாட்டுடன் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப் படவேண்டுமென்று பதில் வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்திருந்தார். உல்லாசப் பயணிகளின் வருகையை ஊக்குவிக்கவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் இந்த நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

## சிறைச்சாலை கட்டிட வேலைகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள சிறைச்சாலைக்கான கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் செனரத் பண்டார தெரிவித்தார்.

யாழ்.பண்ணை வீதியில் அமைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக்கான கட்டிட வேலைகள் கடந்த மாதங்களில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. எனினும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் கட்டிட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

சுமார் 20,000 கைதிகளை தங்க வைக்கக் கூடிய விதமாக கட்டிடம் அமையவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், புதிய சிறைச்சாலைக்காக வேலைத்திட்டம் 2014 இல் நிறையவடையவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

## டெங்கு நுளம்பைத் தேடி கொழும்பில் 11,500 வீடுகளில் சோதனை

கொழும்பு நகரில் டெங்கு ஒழிப்பு தொடர்பாக சுகாதார அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் இணைந்து நேற்று முன்தினம் பாரிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டன.

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை மேற்கொண்ட பாரிய நடவடிக்கையின்போது கொழும்பு நகரிலுள்ள 11 ஆயிரத்து 500 வீடுகள் சோதனைக் குட்படுத்தப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது டெங்கு நுளம்பு உருவாகும் வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 53 பேர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரின் ஒத்துழைப்புடன் டெங்கு ஒழிப்புத் தொடர்பாக பாரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஓர் அங்கமாக நேற்யை தேடுதல் நடவடிக்கை பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தமயந்தி ஜயரத்ன, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க ஆகியோரின் வழிகாட்டலில் 750 பொலிஸ் அதிகாரிகள், 200 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், 400 இராணு வீரர்கள், 200 தனியார் பாதுகாப்பு சேவை ஊழியர்கள் என 1550 பேர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

## டெங்கு நுளம்பு பரவ வழிவகுத்த 766 பேர் கடந்தவாரம் சிக்கினார்

டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய விதத்தில் தமது வீட்டு அல்லது வர்த்தக நிறுவனச் சூழலை அசுத்தமாக வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்தவாரம் நாடு பூராகவும் 766 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாடு பூராவிலுள்ள பொதுச் சுகாதார அதிகாரிகள் இந்த வழக்கினைத் தாக்கல் செய்துள்ளனர்.

டெங்கு பெருகும் இடங்களைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு, சுகாதார சேவை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் 1,33,406 இடங்களில் சோதனை நடத்தப்பட்டுள்ளதாகப் பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் கூறினார். நுளம்புக் கட்டுப்பாட்டுச் சட்ட விதி முறைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களுக்கு முரணாக நடப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்விதிகளை மீறி நடப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாவிலிருந்து ஐயாயிரம் ரூபா வரை தண்டம் அறவிடப்படும். இந்த விதிகளை மீறி நடப்பவர்களுக்கு ஆறுமாதகால சிறைத்தண்டனை வழங்க சட்டத்தில் இடமுண்டு நுளம்பு பெருகும் விதத்தில் வீடுகள், குடியிருப்புகளை வைத்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இதுவரை 28 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளது.


### இன்று நயினை நாகபூஷணி அம்பாள் தீர்த்தோற்சவம்



சைவப்புலவர்
செ.கந்த சத்தியதாசன்

ஏகநாயகன் தேவியாய் உறை
எங்கள் சக்தியைப் பாருங்கள்
நாகபூசணி நயினை வாகினி
நம்பினோர் குறைதீர்க்கும் பூரணி
நாகதீபத்து அரும் கற்பூசணி
நம்பினோர் களின் அருள்மாமணி
சோகம் தீர்ப்பவள் சொந்தமானவள்
சோதி வடிவினன் நாயகி!


## இலங்கையில் இணையத்தளங்கள் ஒழுக்கநெறி பிறழ்ந்து செயற்படுகின்றன

### - தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கண்டனம்

"சுதந்திர ஊடகத்தை பொறுப்பின்றி தம்முடைய குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி, செய்திகளைப் பிரசுரிக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மக்களால் விடுக்கப்படும் கோரிக்கையை நிராகரிக்க பொறுப்புமிக்க அரசினால் முடியாது" என்று தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அதுகலன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஊடக நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் இருக்க வேண்டிய பிழையின்றியும், பொறுப்புடனும் செய்திகளை சமர்ப்பிக்கும் ஊடக ஒழுக்க நெறிகளைக் கடந்து இணையத் தளங்கள் செயற்படுவது வெட்ட வெளிச்சமாகும். தவறான அபகீர்த்தியான தகவல்கள் பிரசுரமாகின்றன. இவற்றை நெறியாள்கை செய்ய வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

ஊடகங்கள் வாசகர்களுக்கு அபகீர்த்தி ஏற்படா வண்ணம் செயற்பட வேண்டுமென சர்வதேச ரீதியிலும், தேசிய மட்டத்திலும் ஒழுக்க நெறிக் கோவைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவதூறு மிக்க போலியான தகவல்கள் வழங்கல் மூலம், பொது மனித உரிமை மறுக்கப்படுகிறது. அத்துடன் மனித உரிமைகளும் மீறப்படுகின்றன.

இலங்கையில் அநேக ஊடக நிறுவனங்கள் ஊடக தர்மம் தொடர்பாகக் கவனமாகவே உள்ளன. இருந்தும் இலாபத்தையும், குறுகிய நோக்கங்களையும் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட இணையத்தளங்கள் தனிநபர்களுக்கும் பல்வேறு தரப்பினருக்கும் அபகீர்த்தியும், அவதூறும் விளைவிப்பதற்காக இத்தகைய சேறுபூசும் செய்திகளை பிரசுரிக்கின்றன. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்பதை இணையத் தளங்களைக் கண்காணிப்புச் செய்வதன் மூலம் தெளிவாகக் காண முடிந்துள்ளது.

வாசகர்களை அபகீர்த்திக்கும் அவதூறுக்கும் உட்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக ஒரு நடைமுறை தேவை. கடந்த கால இணையத்தள செயற்பாடுகளால் இது மிகத் தெளிவாகியுள்ளது. இன்றேல் வாசகர்கள் கஷ்டப்படுவார்கள். பெரும் நஷ்டம் ஏற்படும். சில இணையத் தளங்களில் பிரசுரமாகும் விடயங்களை எவ்வகையிலும் செய்திகளாகக் கொள்ள முடியாது. அவற்றை எழுதுவோரையும் ஊடகவியலாளர்கள் எனக் கொள்ள முடியாது. தற்காலத்தில் குழந்தைப் பருவத்தினரும், இளைய பரம்பரையினருமே அதிகமாக இணையத் தளங்களைப் பயன்படுத்துகின்றனர்.

அவர்களின் மனங்களைக் கெடுத்து, தவறான முன் உதாரணங்களை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். அவ்வாறே முன்னணி முற்போக்கு ஊடகவியலாளர்களுக்கும் அவர்களின் தொழிலுக்கும் இதனால் பெரும் அவமானமும் ஏற்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கணவன் - மனைவி பிரச்சினையில் நண்பன் தலையிட்டதால் ஏற்பட்ட விபரீதம்

இடம் - கட்டுநாயக்கா பொலிஸ் நிலையம்

திகதி - கடந்த 16ஆம் திகதி

நேரம் - இரவு 08 மணி இருக்கும்

டெனிம் காற்சட்டை அணிந்த அவருடைய அணிந்த அவருடைய மேற்பகுதி வெறுமையாக இருந்தது. அவருடைய உடல் முழுவதும் இரத்தம். வலது கையில் மிகவும் கூர்மையான கத்தி. கொலை வெறியுடன் காணப்பட்ட அவர், நேரடியாகப் பொலிஸ் நிலைய வாசலில் வந்து நின்றார். அவ்விடத்தில் காவலுக்கு நின்ற பொலிஸ் உத்தியோகத்தர் அவருடைய கோலத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

"ஏ.ஐ.சி. ஐயாவை சந்திக்க வேண்டும்"

"ஏன் என்னத்துக்கு?"

பொலிஸ் உத்தியோகத்தருக்குப் பயம் ஏற்பட்டது.

"நான் பெரிய ஐயாவை சந்திக்க வேண்டும்"

உடனேயே அவரைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன் நிறுத்தினார்கள்.

"ஏன் என்ன இது" பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆச்சரியத்துடன் கேட்டார்.

"எனக்குத் தினமும் தூஷண வார்த்தைகள் கேட்க முடியாது சேர். அதனால் தான் அவனைக் குத்திவிட்டேன். அவன் இப்ப நிலத்தில் விழுந்திருப்பான். நான் பொலிஸில் சரணடைவதற்காக வந்துள்ளேன்." அவரின் ஆவேசப் பேச்சில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆச்சரியம் அடைந்தார். கடமையில் மிகவும் அனுபவமுள்ள அவர், முதலில் அவனை அமைதிப்படுத்தினார்.

அதன்பின் அவரின் கையிலிருந்த கத்தியை வாங்கிக்கொண்டார். பின்பு நடந்தவற்றைக் கேட்டார். உடனடியாக குற்றத் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரியை அவ்விடத்திற்கு அனுப்பி வைத்தபின் தானும் அவ்விடத்துக்கு விரைந்தார். அந்த நேரம் அவ்விடத்தில் வெட்டுக் குத்து காயங்களுடன் ஒருவரின் சடலம் காணப்பட்டது. வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது அவரின் உயிர் பிரிந்தது.

இறந்தவர் முச்சக்கர வண்டிச் சாரதியான துஷார என்பவர். பொலிஸாரிடம் சரணடைந்தவர் நாதன் எனும் தமிழ் இளைஞர். நாதன் கட்டுநாயக்காவில் நகைக்கடையொன்று நடாத்தி வருகிறார். அதனைக் குத்தகை அடிப்படையில் நடாத்திவருகிறார். இறந்த துஷார நகைக்கடை உரிமையாளரின் மகன் முறையானவர்.

நாதன் திருமணம் செய்து கொண்ட பெண் அம்பாந்தோட்டையை சொந்த இடமாகக் கொண்டவர். அவர் வேலை தேடிக் கட்டுநாயக்காவுக்கு , வந்திருந்தார். அதற்கிடையில் அவன் ஜப்பான் நாட்டிற்கு தொழில் புரியப் போகத் தயாராகிக் கொண்டிருந்தார். அத்தருணத்தில் அவருக்கு நாதனைச் சந்திக்க நேர்ந்தது. அச் சந்திப்பு காதலாக வளர்ந்தாலும் அவன் ஜப்பான் நாட்டிற்கு போய்விட்டான். அங்கிருந்து மீண்டும் இலங்கைக்கு வந்து அவர் நாதனைத் திருமணம் செய்துகொண்டார்.

"இறுதியாக எனது பணத்தில் வீடொன்றை வாங்கினோம். இவர் நன்றாக குடிக்கத் தொடங்கினார். குடிக்க வேண்டாம் என்று சொன்னாலும் அவர் கேட்கமாட்டார். அதனால் எமக்கிடையில் பல பிரச்சினைகள் தோன்றின இறுதியில் நாம் பிரிந்தோம். ஆனால் சட்டப்படி பிரியவில்லை.

அவர் எனக்கு அடிக்கவும் தொடங்கினார் அந்த நேரத்தில் எனக்கு உதவி புரிந்தது இறந்த துஷாரதான். அவரும் நாதனும் நல்ல நண்பர்கள். துஷரவின் நெருங்கிய உறவினரின் நகைக்கடைதான் அது.

நாதன் எப்போதும் துஷாராவை சந்தேகக் கண்ணோடு பார்த்தார் தனது மனைவியுடன் தகாத உறவு வைத்திருப்பதாக நாதன் சந்தேகப்பட்டார். நாதன் தனது மனைவியுடன் ஒன்றாக குடும்பம் நடத்தினாலும் வேறு ஒரு பெண்ணுடனும் தொடர்பு வைத்திருந்தார். அவர் ராஜாங்கனை எனும் இடத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின் தாய். அவரும் கட்டுநாயக்கா பகுதிக்கு வந்தது தொழில் புரிவதற்காகத்தான் இறுதியில் நாதனுடன் காதல் கொண்டவர் வேலைக்கு செல்லவில்லை சாப்பாடு, உடை சகலதும் நாதன் வாங்கிக் கொடுத்தான். அவளை வாடகை அறையில் குடியமர்த்தினான்.

இரவு நேரத்தில் தனது ஆசைநாயகியை தேடிச் செல்லும் நாதன் காலையில் மனைவியின் வீட்டிற்கு வந்து குளித்து, வேலைக்குத் தயாராகிப் போவார். இது அவரின் வழமையான செயல்.

இதற்கிடையில் நாதனின் மனைவி திடீரென நாதனுக்குச் சொல்லாமல் ஊருக்கு புறப்பட்டுப் போனார் வீட்டிற்கு வந்த நாதன் தனது மனைவியைத் தேடினார். அவள் அங்கு இல்லை. அவன் அவரில் சந்தேகப்பட்டது அதனால்தான். இரண்டு நாட்கள் கழித்து அவன் மீண்டும் வீட்டுக்கு வந்தாள். நாதன் அவளைக் கடுமையாகத் தாக்கினார். அதன் பின் தனது ஆசைநாயகியின் வீட்டக்கு புறப்பட்டு சென்றார். சற்று நேரத்தில் துஷார, நாதனின் வீட்டுக்கு வந்தபோது நாதனின் மனைவி நடந்தவற்றை கூறினார். அதனால் துஷார மிகவும் ஆத்திரமடைந்தான். அவனது முகம் கடுமையாகச் சிவந்து போனது.

துஷார நேரடியாக நாதனைத் தேடிச்சென்றாள் அந்த நேரம் நாதன் தனது ஆசை நாயகியுடன் இருந்தான்.

"டேய் நான் உண்டை வீட்டை போறன் உன்னால் முடிந்தால் தடுத்துப்பார்"

துஷார ஆவேசத்துடன் இவ்வாறு கூறினான் துஷாரவின் உதவிக்கு துஷாரவின் நண்பன் ஒருவரும் வந்திருந்தான். இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்திருந்தார்கள். துஷார, நாதன் இருக்கும் அறைக்குள் சென்று பேசத் தொடங்கினான்.

"நீ எனது பிரச்சினையில் தலையிட வேண்டாம் உனக்கு இரு தேவையில்லாத வேலை"

நாதன் அவ்வாறு சொல்லியும் துஷார கேட்கவில்லை. பிரச்சினை நீண்டுகொண்டு சென்றது. நாதன் ஆத்திரமடைந்தான். அவன் கையில் அகப்பட்டது கூர்மையான கத்தி. துஷாரவைக் குத்த நாதன் கத்தியை ஓங்கியபோது துஷார தட்டிவிட அது நாதனின் ஆசை நாயகியின் வயிற்றைப் பதம்பார்த்தது. நாதனால் இதைச் சகிக்கமுடியவில்லை. கோபத்தில் துஷார மீது தாறுமாறாக குத்தத் தொடங்கினான். துஷார எழுந்து ஓடமுற்பட்டபோது நாதன் ஓங்கி ஒரு குத்துக்குத்தினான். நடந்தவற்றை செய்வதறியாது பார்த்துக்கொண்டிருந்த துஷாரவின் நண்பன் அவ்விடத்தை விட்டு ஓடினான்.

நிலத்திலே விழுந்திருந்த துஷாரவை, நாதன் மீண்டும் மீண்டும் குத்தத் தொடங்கினான். உடலில் 15 இடங்களில் வெட்டுக்காயங்கள் இருக்கின்றன. அதன் பின்பு தனது ஆசைநாயகியை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துவிட்டு கத்தியுடன் பொலிஸ் நிலையம் நோக்கிப் புறப்பட்டான்.

"எனது மனைவி மூன்று வருட காலமாக துஷாரவுடன் கள்ளத்தொடர்பு வைத்திருக்கின்றாள். நான் இருவருக்கும் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. தினமும் எனது கடைக்கு வந்து கரைச்சல் படுத்துவான். நான் உன் வீட்டுக்குத்தான் போறன். முடிந்தால் தடுத்துப்பார் என்று



சொல்லுவான் வீட்டுக்கு வந்து சத்தம் போடுவான். நான் இதுபற்றி பொலிஸாருக்கு தெரியப்படுத்தவில்லை" என்றார் நாதன்.

"சம்பவதினம் நான் மனைவியை எச்சரித்தேன் வீட்டில் இருக்க முடியாதபடியால் நான் எனது ஆசை நாயகியின் வீட்டிற்கு சென்றேன். இரவு மூன்று மணி மட்டில் துஷார, தனது நண்பன் ஒருவருடன் கூரிய கத்தியுடன் வந்து எனது ஆசை நாயகியைக் குத்தினான். என்னைத் தகாத வார்த்தைகளால் பேசினான். நான் துஷாராவின் கையிலிருந்த கத்தியைப் பறித்து துஷாரவை குத்தினேன். எனக்குத் தினமும் தேவையற்ற கதைகள் சொல்லுவான். என்னால் இதைக் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. அதனால் தான் இவ்வாறு செய்தேன்."

சந்தேக நபரான நாதன் பொலிஸாருக்கு இவ்வாறு கூறினான்.

பின்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அறிவுறுத்தலின்படி பொலிஸ் உத்தியோகத்தரான சானிக்கா, நாதனின் மனைவியின் வாக்கு மூலத்தினைப் பெற்றுக்கொண்டார்.

துஷார ஏற்கனவே விவாகமானவன் இறுதியில் துஷார இறந்து விட்டான். நாதன் கூண்டில் அடைக்கப்பட்டான். சந்தேகநபர், துஷாரதான் கத்தியுடன் வந்ததாகக் கூறினாலும், உண்மையில் அக் கத்தி சந்தேகநபருக்குச் சொந்தமானது என்று சந்தேகநபரின் மனைவியின் கூற்றில் தெரியவந்தது. சந்தேகநபருக்கும் மனைவிக்கும் இடையில் தொடர்ந்து பிரச்சினைகள் இருந்துவந்தன. இது பற்றிப் பேசிப் பொலிஸாருக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கள்ளத் தொடர்புகளால் ஏற்படுகின்ற பின் விளைவுகள், பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறியும் பலன் இல்லை.

துஷார என்ற நபருக்கு இது தேவையற்ற வேலைதான். கணவருக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையில் இன்னொருவர் அநாவசியமாக தலையிடப் போனதால் அவர் இறக்க நேரிட்டது. இறுதியில் அநியாயமாக அவர்களது மனைவி, பிள்ளைகள் தான் அநாதையானார்கள்.

# திபெத் வளர்ச்சிக்கு இட்டுச் சென்ற இனக் குழுமங்களின் குடிபெயர்வு!

மனிதகுலத்தின் வரலாற்றில், ஒவ்வொரு பண்பாடும், ஒவ்வொரு தேசிய இனமும், சுற்றுப்புறத்திலுள்ள பண்பாடு மற்றும் தேசிய இனங்களுடன் பரிமாற்றம் செய்து வளர்ச்சி அடைந்து வருகின்றன. ஆனால், வேறுபட்ட தேசிய இனங்கள் மற்றும் பண்பாடுகளுக் கிடையே பரிமாற்றம் மற்றும் தொடர்பு குறித்த விவாதத்தில், மக்களின் குடிபெயர்வு அடிக்கடி அலட்சியம் செய்யப்படுகிறது. உண்மையில், மனிதர் பண்பாட்டைத் தாங்கி நிற்பவர்கள் ஆவர். மனிதர்களுக்கிடையேயான தொடர்பு, வேறுபட்ட பண்பாடுகளுக்கிடையேயான தொடர்புக்கான அடிப்படை. திபெத் இனப் பிரிவுகளின் வரலாற்று வளர்ச்சியைப் பார்த்தால், சமவெளி நோக்கிய திபெத் இன



மக்களின் குடிபெயர்வில் மூன்று கால கட்டங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

முதல் காலக்கட்டம், 7 முதல் 9ஆவது நூறாண்டு வரையான துபோ வம்சம். தாங் வம்சத்தின் உரிமைப் பிரதேசத்துக்குக் குடிபெயர்ந்த திபெத் மக்களில் துபோ வம்சத்தின் படையினர் மிக முக்கியமாக இடம்பெற்றனர். துபோ மக்கள் திபெத் மக்களின் மூதாதையர் ஆவர்.

இரண்டாவது காலக்கட்டம், 13 முதல் 14ஆவது நூற்றாண்டு வரையான யூவான் வம்சம். யூவான் வம்சத்தின் ஆட்சியாளர்கள் பொதுவாக திபெத் மரபுவழி புத்தமதத்தை நம்புகின்றனர். திபெத் துறவிகள் அரச குடும்பத்தின் சிறப்பு வரவேற்பைப் பெற்றனர். பேரரசரின் ஆசிரியராக திபெத் துறவி பதவியேற்கும் அமைப்பு முறை உருவாக்கப்பட்டது. இதனால் திபெத் துறவிகள் பலர் யூவான் வம்சத்தின் தலைநகருக்கு விரைந்து சென்று, அங்கே தங்கியிருந்து வந்தனர்.

மூன்றாவது காலக்கட்டம், 14 முதல் 17ஆவது நூற்றாண்டு வரையான மிங் வம்சம். அக்காலத்தில், திபெத் மட்டுமல்ல, திபெத் இனப் பகுதிகள் அனைத்திலும் உள்ள திபெத் மக்கள் சமவெளிக்குக் குடிபெயர்ந்தனர். துறவிகள் மட்டுமல்ல, திபெத் இனப் பகுதிகளின் தலைவர்களும் சமவெளிக்குக் குடிபெயர்ந்தனர்.

மேற்கூறிய 3 காலக் கட்டங்களில், ஒரு பொது தனிச்சிறப்பு தெளிவாகக் காணப்படுகிறது. அதாவது, அந்த 3 கால கட்டங்கள், சிங்ஹாய் - திபெத் பீடபூமி சமூகம், பெரிய மாற்றம் மற்றும் வளர்ச்சி அடைந்த முக்கிய கால கட்டங்களாகும்.

வரலாற்றில், சமவெளிப் பகுதிக்கு திபெத்தியர்களின் குடிபெயர்வு, திபெத்தின் சொந்த வளர்ச்சியுடன் நெருக்கமான உட்புற தொடர்பு உடையது.

திபெத்தின் வரலாற்றில், பெரும் வளர்ச்சி அடைந்த அனைத்துக் கால கட்டங்களிலும், சமூகச் சரிப்படுத்தல் நடைபெற்ற அனைத்து முக்கிய திருப்பு முனைக் கால கட்டங்களிலும், சமவெளியில் அமைந்துள்ள இதர பிரதேசங்கள் நோக்கி திபெத்தியர்கள் பெருமளவில் குடிபெயர்ந்ததுண்டு. மேலும், இத்தகைய குடிபெயர்வுகள் ஒவ்வொரு முறையும் திபெத்தின் சமூக வளர்ச்சிக்குப் புதிய உயிராற்றல், திருப்பம் மற்றும் முக்கிய வாய்ப்புகளைக் கொண்டு வந்துள்ளன.

ஆனால், ஹான் இன மக்கள் திபெத்திற்கு குடிபெயர்ந்து, திபெத்தின் மூலவளத்தையும் வேலை வாய்ப்புகளையும் கொள்ளையடிக்க ஊக்கமளிப்பது அப்போதைய சீன நடுவண் அரசின் கொள்கையாகும். இது திபெத் இனப் பண்பாட்டுக்கு கடும் அறைகூவலாக அமைந்துள்ளது என்று சர்வதேச அளவில் அதிகமாக கூறப்படுகிறது.

உண்மையில், சீனாவின் சீர்திருத்தம் மற்றும் வெளிநாட்டு திறப்பு கொள்கை நடைமுறைக்கு



சீன மக்களின் இனம் ஒன்றின் ஆடையலங்காரம்

வந்த பின், சீன மக்கள் உள்நாட்டில் தாராளமாகக் குடிபெயரும் உரிமை சட்டப்பூர்வ உத்தரவாதம் பெற்றுள்ளது. 2011இல் ஒரு கள ஆய்வின்படி, பெய்ஜிங், ஷாங்காய், செங்து, குவாங்சோ, சிநிங், லான்சோ, குன்மிங் உள்ளிட்ட பெரிய நகரங்களில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த திபெத் இன மக்கள் உள்ளனர்.

பல்வேறு தேசிய இன மக்கள் திபெத்தில் வியாபாரம் செய்து, பணிபுரிந்து, பரிமாற்றம் செய்து, புனிதப் பயணம் மேற்கொள்ளும் அதேவேளையில், பெருவாரியான திபெத் இன மக்கள் திபெத் தன்னாட்சிப் பிரதேசத்திலிருந்தும், சிச்சுவான், சிங்ஹாய், கான்சூ, யுன்னான் ஆகிய மாநிலங்களின் திபெத் இன தன்னாட்சி சோ மற்றும் வட்டங்களிலிருந்தும், ஹான் இன மக்கள் குழுமி வாழும் பெரிய நகரங்களுக்கு



வருகின்றனர். திபெத் இன மதம், பண்பாடு, உணவு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையும் அவர்கள் ஹான் இனப் பகுதிகளுக்குக் கொண்டு வருகின்றனர். சமவெளியிலுள்ள நகரங்களின் பண்பாடு மற்றும் சந்தைத் தேவையை மிகப் பெருமளவில் செழுமைப்படுத்துவதோடு, அந்த நகரங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் பண்பாட்டுச் செழுமைக்கும் அவர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

12ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்துக்குள் திபெத்தில் தேசிய இன கைவினைப் பொருட்களின் மொத்த உற்பத்தி மதிப்பு *100 கோடி* யுவானை எட்டக்கூடும். அதற்காக திபெத் தன்னாட்சிப் பிரதேச அரசு தொடர்புடைய திட்டங்களை வகுத்துள்ளது.

சுற்றுலாச் சந்தையை முன்னேற்றுவதுடன் பிரதேசத் தனிச்சிறப்பு வாய்ந்த கைவினைப் பொருட்களின் உற்பத்தித் தளமும் தொழில் நிறுவனங்களும் திபெத்தில் முக்கியமாக வளர்க்கப்படும் என்று தெரிகிறது. தேசிய இனக் கைவினைப் பொருள் துறை வளர்ச்சியை விரைவுப்படுத்தும் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் திபெத் அரசு ஆராய்ந்து வகுத்து, இத்துறையில் சிறப்பாக நிதியுதவி வழங்கும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

## 1300 ஆண்டுகள்

வரலாறுடைய தாங்கா ஓவியக் கலை, வண்ணமயமான பட்டுத்துணியில் வேலைப்பாடுகளுடன் அமையும் மத சார் ஓவியமாகும். இந்த ஓவியங்களை வரைவது மிகவும் சிக்கலானது. தாங்கா, திபெத்தின் தொல்பொருட்களின் செல்வங்களில் முக்கிய பகுதியாகும். இது திபெத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த சுற்றுலா நினைவுப் பொருட்களில் சிறந்த ஒன்றாகும். இதற்குப் பரந்த வணிக வாய்ப்புகள் உண்டு.

திறந்த பொருளாதாரம் மற்றும் சகிப்பு, மனித குலத்தின் முன்னேற்றம் மற்றும் இணக்கத்துக்கான முக்கிய அடையாளமாகும். 60 ஆண்டுகளுக்கு மேலான முயற்சியுடன், திபெத் மற்றும் இதர திபெத இனப் பகுதிகளுக்கான அனுமதி அளவு முன்பை விட பெருமளவில் உயர்ந்துள்ளது. ஹான் இனமும் திபெத் இனமும் முன்னெப்போழுதையும் விட அதிக அளவில் ஒன்றை ஒன்று ஒப்புக்கொண்டு ஏற்றுக் கொண்டுள்ளன. மக்கள் தொகை அதிகமாக உள்ள சிச்சுவான் மாநிலத்தில் நில வளம் மதிப்பு மிக்கதாகும். இம்மாநிலத்தில் திபெத் இன மக்கள் குழுமி வாழும் பகுதிகள் சில உருவாகி வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது ஹான் இனத்துக்கும் திபெத் இனத்துக்கும் இடையே உறவு வரலாற்றில் மிக நல்ல காலக்கட்டத்தில் இருக்கிறது. பெருவாரியான திபெத் இன மக்கள், ஹான் இன மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் தங்கியிருக்கும் நிலைமை இதைக் காட்டுகிறது.

- சீன இணையம்

தமிழ்நாதம்
Thamil Naatham

ஜுலை மாதம் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## இலங்கையில் மழை பெய்தால் இந்தியாவில் குடை பிடிக்கும் சீமான்கள்

"இலங்கையின் மனித உரிமை விவகாரங்களில் கொழும்பு அரசாங்கம் கரிசனையுடன் செயற்பட வேண்டும். இல்லையேல் இவ் வருட இறுதியில் ஜெனீவாவில் நடக்கப் போவதைக் கொழும்பு பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்" என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன் கூறினாரென்று செய்திகள் வெளி வந்துள்ளன. கொழும்பில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டுக் கடந்த வெள்ளிக்கிழமை இரவு புதுடில்லி திரும்பியிருந்தார் சிவ்சங்கர் மேனன், இலங்கையில் நடத்திய முக்கிய சந்திப்புகள் தொடர்பாக இந்திய ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே சிவ்சங்கர் மேனன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

"வட மாகாண சபைத் தேர்தலை வலியுறுத்தவோ அல்லது அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு அழுத்தம் கொடுக்கவோ சிவ்சங்கர் மேனன் கொழும்புக்கு வரவில்லை. வழமையான, பொதுவான விஜயமாகவே அவரது வருகை அமையும்" என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவித்திருந்த களநிலையிலேயே சிவ்சங்கர் மேனன் கொழும்புக்கு வருகை தந்திருந்தார். இந்தத் திடீர் விஜயம் வழமையோ, பொதுவானதோ அல்லது இல்லையோ என்பதல்ல பிரச்சினை. கொழும்புக்கு மேனன் வந்து சேருவதற்கு சில, பல மணித்தியாலங்கள் முன்னதாகவே வட மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் செப்டம்பரிலேயே நடைபெறுமென்ற செய்தி வெளியாகியிருந்தது.

சிவ்சங்கர் மேனனின் கொழும்பு வருகைக்கு முன்னர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியதையும், கொழும்பு விஜயத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி திரும்பிய மேனன் புதுடில்லி ஊடகவியலாளர்களிடம் கூறியதையும் முடிச்சுப் போட்டுப் பார்த்தால் ஏதோ ஒன்று புலனாகிறது. அதுமட்டுமன்றி, வட மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம்தான் நடைபெறுமென்று கூறப்பட்டிருப்பதையும் சேர்த்துப் பார்த்தால் ஏதோ புரியாத புதிரொன்றும் மூளையில் தட்டுகிறது.

இந்தியா, இலங்கையின் அண்டை நாடு. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு கேந்திரமான பூகோள அமைவிடத்தில் இலங்கை உள்ளது. இதற்கும் அப்பால் தமிழ்நாட்டின் ஆறரைக் கோடித் தமிழர்களுக்கும், இலங்கை வாழ் தமிழ் மக்களுக்குமிடையில் வரலாற்று ரீதியான நீண்ட தொடர்புகளும் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் மழை பெய்தால் சென்னையில் குடை பிடிக்கக்கூடிய சீமான்களும் தமிழ்நாட்டில் உள்ளார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தேசிய, சர்வதேச அழுத்தங்கள் இந்திய மத்திய அரசுக்கு இருக்குமென்பதையும் மறுப்பதற்கில்லை.

இலங்கையை விட மோசமான ஆயுதக் கிளர்ச்சிகளைச் சந்தித்த, சந்தித்துக் கொண்டிருக்கும் நாடு இந்தியா, காலிஸ்தான், காஷ்மீர், மிசோறாம், நாகலாந்து, நக்ஸலைட்டுகள் என்று பட்டியலிட்டுக் கொண்டே போக முடியும். குஜராத்தின் கோத்ரா ரயில் குண்டுத் தாக்குதலையடுத்து முஸ்லிம் மக்களை வேட்டையாடியதில் காங்கிரஸ் எம்.பி.க்களுக்கும் சம்பந்தமுண்டென்று குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளரெனக் கருதப்பட்ட நரேந்திர மோடி மீது கூடக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் பழங்குடி மக்கள் வாழும் பெரும்பாலான பகுதிகள் இன்னமும் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன இவையே யதார்த்தம்.

"யுத்தத்தில் முதலில் கொல்லப்படுவது உண்மையே" என்றான் ஜோன் பில்கர் என்ற அறிஞன். யுத்தத்தின் பின்னரும் உண்மைகள் சொல்லப்படலாம். சிவ்சங்கர் மேனன் கூறியதைப் போன்று வருட இறுதியில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட மீளாய்வின்போது இலங்கை விவகாரம் எடுக்கப்படலாம். இறுதி யுத்தத்தின்போது தாக்குதலை நிறுத்துமாறு இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் கூட இலங்கையை நிர்ப்பந்தித்தன. இருந்தும் தாக்குதல் தொடரவே செய்தது.

எந்த நாடும் தனது சொந்த நாட்டின் நலனை முன் வைத்துத்தான் சர்வதேசப் பிரச்சினைகளைப் பார்க்கும். 1962 இல் மோதிக்கொண்ட சீனாவும் இந்தியாவும் இன்று 'பிறிக்ஸ்' என்ற அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பிலும் சீனாவும் இந்தியாவும் அங்கம் வகிக்கின்றன. உலக தளத்தில் பனிப்போர் உக்கிரமாக நடந்த காலங்களெல்லாம் இப்போது கரைந்து போய்விட்டன. உலகமே சுருங்கி ஒரு கிராமம் போலாகி விட்டது. சிநேக முரண்பாடுகள், பகைமை முரண்பாடுகளாக வளர விடப்படக்கூடாது. ஐக்கியமும் போராட்டமும் என்ற விதி சில வேளைகளில் சிநேக முரண்பாடுகளைத் தீர்க்க உதவலாம்.

இனப் பிரச்சினையே இலங்கையில் யுத்தத்துக்குக் கால் கோளிட்டது. இங்கே எல்லாம் சுகமாக நடந்தனவென்று சொல்வதற்கு நாம் முனையவில்லை. ஆனாலும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# அமெரிக்கா என்ன சர்வதேசப் பொலிஸ்காரனா?



அமெரிக்கா, சர்வதேச பொலிஸ்காரனைப் போல நடந்து கொள்ளும் ஒரு நாடு. மூன்றாம் உலக நாடுகளின் உள்விவகாரங்களில் மூக்கை நுழைப்பது அதற்கு அத்துபடியான ஒரு விவகாரம். இலங்கையில் மட்டுமல்ல, ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளின் விவகாரத்திலும் ஓர் எசமானப் பாணியுடன் கருத்துக்களை வெளியிடுவதும் வழக்கம்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் இன நல்லிணக்க விவகாரங்களைக் கையாள்வதற்கான செயல் திட்டமொன்று இலங்கை அரசிடம் இல்லையென்று அமெரிக்காவின் வெளிவிவகார உதவி அமைச்சர் மைக்கல் போஸ்னர் அண்மையில் குற்றஞ் சாட்டியிருந்தார். ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவி அமைச்சரே மைக்கல் போஸ்னர். இன நல்லிணக்க விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்க அரசு தொடர்ந்தும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் அனைத்துமே சரியானது என்று வக்காலத்து வாங்குவது எமது நோக்கமல்ல. பிரச்சினைத் தீர்வுக்கான முன் முயற்சிகளை இலங்கை அரசாங்கம் உட்படச் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் இதய சுத்தியுடன் மேற்கொள்ள வேண்டும்.

ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கொண்டு வந்ததும் அமெரிக்காதான். அதற்காக யுத்த காலத்தில் அமெரிக்கா இலங்கை அரசுக்கு உதவியதை மறுக்க முடியாது. இருந்தாலும் மூன்றாம் உலக நாடுகள் தொடர்பாக பல்வேறு விடயங்களில் அமெரிக்கா இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்ற விமர்சனங்களும் எழவே செய்கின்றன.

ஈராக்கில் பேரழிவு மிக்க ஆயுதங்கள் இருப்பதாகப் பொய் கூறிக்கொண்டு அந்த நாட்டை ஆக்கிரமித்த நாடு அமெரிக்கா. அமெரிக்கப் படைகள் இலட்சோப இலட்சம் ஈராக்கிய மக்களைக் கொன்று குவித்தன. இன்றுவரை பேரழிவு மிக்க ஆயுதங்களை அமெரிக்கப் படைகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஈராக் மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடையினால் சுமார் ஐந்து இலட்சம் சிறுவர்கள் பசி, பட்டினி மற்றும் நோய்களுக்கு இரையானார்கள். சி.பி.எஸ் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின்போது இந்தக் கொடூரம் குறித்து முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மடலின் அல்பிறைட்டை பேட்டி கண்ட லிஸ்லி ஸ்ரன்ஸ்ல் என்ற நிருபர் கேள்வி எழுப்பினார். "ஈராக்கில் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் அநியாயமாக மாண்டு போனார்களே. நீங்கள் கொடுத்த விலை பெறுமதி மிகக்து என்றா கருதுகிறீர்கள்? இது ஹிரோசிமாவின் அழிவை விட மோசமானது இல்லையா?" என்று கேட்டார் நிருபர்.

"பதிலளிப்பது கஷ்டம்தான். ஆனாலும் நாம் கொடுத்த விலை பெறுமதி மிக்கது என்றுதான் கருதுகிறோம்" என்றார் அம்மணி.

ஈராக்கில் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னையும், ஆப்கானிஸ்தானில் தலிபான்களையும் ஆரம்பத்தில் போஷித்து வளர்த்ததும் அமெரிக்காவே. ஈரான்-ஈராக் யுத்தத்தின்போதும் அதற்கு முன்னரும் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னுக்கு ஆயுத உதவி உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கியது அமெரிக்கா. ஆப்கானிஸ்தான் சோவியத் சார்பு ஜனாதிபதி நஜிபுல்லாவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோது, அந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகத் தலிபான்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கியதும்

**எஸ்.அருளானந்தன்**

அமெரிக்காவே. பின்னர் இந்த இரண்டு நாடுகளையும் ஆக்கிரமித்த அமெரிக்கப் படைகள் செய்த அட்டூழியங்கள் அநந்தம்.

1948இல் பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்து இஸ்ரேல் என்ற நாடு தோற்றம் பெற்று வளர்ச்சியடைய அன்றிலிருந்து இன்று வரை அனைத்து உதவிகளையும் அமெரிக்காவும் அதன் மேற்கத்தைய நேச நாடுகளும் அளித்து வருகின்றன. 1967 யுத்தத்தின்போது கிழக்கு ஜெருசலம் உட்பட பல பாலஸ்தீன பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டது. இன்றுவரை அவற்றைத் தனது கட்டுப்பாட்டிலேயே இஸ்ரேல் வைத்திருக்கிறது. உலக அமைப்பென வர்ணிக்கப்படுவது ஐக்கிய நாடுகள் சபை. அங்கு ஆக்கிரமிப்பு நாடான இஸ்ரேல் ஓர் அங்கத்துவ நாடு. பாதிக்கப்பட்ட பாலஸ்தீனம் இன்றுவரை அங்கத்துவம் பெறவில்லை. வெறும் பார்வையாளர் அந்தஸ்து மட்டுமே.

பாலஸ்தீன மண்ணில் இஸ்ரேல் மேற்கொண்ட திட்டமிட்ட குடியிருப்புகள் இன்னமும் இருக்கின்றன. அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய ஆயுதங்களுக்குப் பலியான பாலஸ்தீன மக்களின் தொகை பல்லாயிரம். அமெரிக்காவைப் பொறுத்தவரை இவையெல்லாம் அப்பட்டமான ஜனநாயக நடவடிக்கைகளாகும், மனித உரிமை மீறல்களே அல்ல. இஸ்ரேலுக்கு எதிராக ஐ.நா. நிறைவேற்றிய நூற்றுக்கணக்கான தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டன.

வியட்நாம், மற்றும் கொரிய யுத்தங்களின்போது அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் செய்த அட்டூழியங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

1950ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ஆம் திகதி நோகுன் றீ ரயில்வே பாலத்தில் 300இற்கும் மேற்பட்ட அப்பாவிக் கொரிய மக்களை அமெரிக்கப் படையினர் சித்திரவதை செய்து கொன்றனர். அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு சில அட்டூழியங்களில் இதுவுமொன்று. எந்தவித விசாரணைகளுமின்றி அமெரிக்க அரசாங்கம் இந்தக் கொடூரத்தை மூடி மறைத்தது. ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இந்தக் கொடுஞ் செயலுக்காக அமெரிக்கா மனவருத்தத்தைத் தெரிவித்தது. 2001ஆம் ஆண்டுதான் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் இந்தக் கொடூரம் குறித்துத் தனது மனவருத்தத்தைத் தெரிவித்தார். இந்த மனித உரிமை மீறல் சம்பந்தமாக ஒரு சாதாரண விசாரணையைக் கூட அமெரிக்கா நடத்தவில்லை.


வியட்நாம், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் வேட்டைக் காடாகவே விளங்கியது. மைலாய் படுகொலையைப் புலிற்சர் பரிசு பெற்ற பத்திரிகையாளர் செய்மௌர் ஹேர் அம்பலத்துக்குக் கொண்டு வந்தபோது உலகமே அதிர்ந்தது. 1968 இல் நிகழ்ந்த இந்த மைலாய்ப் படுகொலையின்போது பாலியல் வன்புணர்ச்சிக் கொடூரங்களும் தாராளமாகவே இடம்பெற்றிருக்கின்றன. இந்தப் படுகொலையில் பல அமெரிக்கப் படையினர் சம்பந்தப்பட்டிருந்தனர். இருந்தாலும் லெப்டினன்ட் கல்லே என்ற அதிகாரி மட்டுமே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டான். அவனுக்கும் அப்போதைய ஜனாதிபதி றிச்சர்ட் நிக்சன் பின்னர் மன்னிப்பு அளித்துவிட்டார். பத்திரிகையாளர் செய்மௌர் ஹேரின் புலனாய்வு நடவடிக்கைகளே இக்கொடூரத்தை அம்பலத்துக்குக் கொண்டுவந்தது. ஊருக்குத்தான் உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லையடி என்ற பாணியில் அமெரிக்கா செயற்படுகிறது.

# "கான கந்தர்வன்"

1940 ஜனவரி 10ஆம் திகதி இலத்தீன் கத்தோலிக்கக் குடும்பத்தில் அகஸ்டைன் யோசப்புக்கும் அலைசுகுட்டிக்கும் மகனாக கேரளாவின் ஃபோர்ட் கொச்சியில் கே.ஜே.யேசுதாஸ் பிறந்தார். அவரது தந்தை அனைவரும் அறிந்த மலையாள செவ்விசைக் கலைஞரும் நடிகரும் ஆவார்.கே.ஜே.யேசுதாஸ்

அவர் தமது 50 ஆண்டுகள் திரை வாழ்வில் மலையாளம், தமிழ், இந்தி, கன்னடம், தெலுங்கு, வங்காள மொழி, குஜராத்தி, ஒரியா, மராத்தி, பஞ்சாபி, சமஸ்கிருதம், துளு, மலாய் மொழி, உருசிய மொழி,அராபிய மொழி, இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 40,000-க்கும் கூடுதலான திரைப்பாடல்களைப் பாடியுள்ளார்.

சிறந்த திரைப் பின்னணிப் பாடகர் வகையில் வேறு எந்தப் பாடகரும் சாதிக்காத நிலையில் ஏழு முறை தேசிய விருது பெற்றுள்ளார். மாநில அளவில் கேரளம், தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்க அரசுகளிடம் மொத்தம் 45 முறை சிறந்த திரைப் பாடகராக விருது பெற்றுள்ளார். திரையிசை தவிர, கர்நாடக இசைக்



கச்சேரிகள் பல நிகழ்த்தியுள்ளார். சமயப் பாடல்கள், பிற மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய இசைத்தொகுப்புகளையும் வழங்கியுள்ளார். மலையாளத் திரைப்படங்களுக்கு இசை இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார். இவரை "கான கந்தர்வன்" என்று இவரது இரசிகர்கள் அழைக்கின்றனர்.

இசைப்பயிற்சியை அவரிடமே கற்ற யேசுதாஸ் பின்னர் திருப்புனித் துறையில் இருந்த இசை அகாதெமியில் தமது இசைக் கல்வியைத் தொடர்ந்தார். சற்றுகாலம் வேச்சூர் அரிகர சுப்பிரமணிய அய்யரிடம் பயின்ற பின்னர் கருநாடக இசைமேதை செம்பை வைத்தியநாத பாகவதரிடம் மேல்நிலைப் பயிற்சி பெற்றார். இந்துஸ்தானி இசையிலும் தேர்ச்சி பெற்றார்.

யேசுதாஸ் திரைப்படப் பாடகராக 1960களில் கால்பாடுகள் என்ற மலையாளத் திரைப்படத்தில் துவங்கினார். தமிழ் திரைப்படங்களில் எஸ்.பாலச்சந்தரின் பொம்மையில் முதன்முதலாக "நீயும் பொம்மை, நானும் பொம்மை" என்ற பாடல் மூலம் அறிமுகமானார். ஆனால் முதலில் வெளியான படமாக கொஞ்சும்குமரி அமைந்தது. 1970களில் இந்தித் திரைப்படங்களில் பாடத் தொடங்கினார். முதல் இந்தி மொழிப்பாடல் "ஜெய் ஜவான் ஜெய் கிசான்" என்ற திரைப்படத்திற்கு பாடினார். ஆயினும் அவர் பாடி வெளிவந்த முதல் இந்திப் படமாக "சோடிசி பாத்" அமைந்தது. இவற்றைத் தொடர்ந்து பல்வேறு மொழிப் படங்களில் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடிப் பல விருதுகளையும் பெற்றார். 2006ஆம் ஆண்டு சென்னை ஏ.வி.எம் அரங்கில் ஒரே நாளில் நான்கு தென்னிந்திய மொழிகளிலும் 16 திரைப்படப் பாடல்களை பாடிச் சாதனை நிகழ்த்தினார்.

கர்நாடக இசை மேதையும் பிரபல பின்னணிப் பாடகருமான, கே.ஜே.யேசுதாஸ் திரைத் துறையில் பாடகராக அறிமுகமாகி 50 ஆண்டு காலத்தை நிறைவு செய்துள்ளார். திரைப் படத்துறையில் இது மிகப்பெரிய சாதனையாக போற்றப்படுகிறது.

எப்போதெல்லாம் நல்ல இசை கேட்கிறோமோ அந்த நிமிடங்களில் மனம் நனைந்து கரைந்து உருகும் அதிசய அனுபவத்தைப் பெறுகிறோம். வானத்தில் பறப்பது போன்ற உணர்வைப் பெறுகிறோம். இந்த உலகம் இப்படியே மகிழ்ச்சிக்குள் அமிழ்ந்து போகட்டும் என எண்ணத் தோன்றும். மொழிகளுக்கும் எல்லைகளுக்கும் அப்பாற்பட்டது இசை மட்டுமே. எதிரியே பாடினாலும் நின்று கேட்க வைக்கும் அபார சக்தி இசைக்கு மட்டுமே சொந்தம். தெய்வீக குரலுடைய கே.ஜே.யேசுதாஸ் பாடிய பாடல்கள் அனைத்துப் பாடல்களுமே கேட்கக் கேட்க திகட்டாதவை.

விருதுக்கு விருது

தெய்வீகப் பாடகர் எனப் போற்றப்படும் யேசுதாசுக்கு கலை மற்றும் கலாசாரத்தில் தன்னிகரற்ற பங்களிப்புகளிப்பிற்காக பத்மஸ்ரீ, பதமபூஷண் ஆகிய மத்திய அரசின் விருதுகள் பெற்றுள்ளார். திரைத் துறையில் சிறந்த பாடல்களைப் பாடியதற்காக 7 முறை தேசிய விருதும் 17 முறை மாநில விருதும் பெற்றுள்ளார்.

இவரது புகழினைப் பரப்பும் வகையில் இவரது இளைய மகன் விஜய் யேசுதாஸ் புகழ்பெற்ற பின்னணி பாடகராக உருவெடுத்துள்ளார்.

# மட்டக்களப்பில் கடும் காற்று: அமைச்சர் எஸ்.பி. உரையாற்றிய மேடை சரிந்தது

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் தற்போது பலத்த காற்றுவீசுகிறது. மட்டக்களப்பு பிள்ளையாரடியில் கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய சுகாதாரப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உரையாற்றிக் கொண்டிருந்தபோது கடும் காற்று வீசத் தொடங்கியதால் அமைச்சர் உடனடியாக மேடையிலிருந்து பாதுகாப்பாக கீழிறக்கப்பட்டார்.

அதன்பின் அதிதிகள் மற்றும் பிரமுகர்கள் மேடையிலிருந்து இறங்கும்போது மேடையும் சரிந்து விழுந்தது. எனினும் இதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவை பிரதியமைச்சர் முரளிதரன் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார்.



இதேவேளை வாழைச்சேனை, ஏறாவூர் முதலான பல பகுதிகளிலும் பலத்த காற்று வீசுகிறது.

# சைவப்புலவருக்கு கௌரவிப்பு

கடந்த வாரம் நிறைவடைந்த ஆவரங்கால் ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜ இராமலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின்போது தொடர் சொற்பொழிவாற்றிய அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் செயலாளர் சைவ சித்தாந்தக் கலாநிதி செ.கந்த சத்தியதாசன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் மகோற்சவ காலத்தின் போது 'சிவனருட் செல்வர்' என்ற பொருளில் தொடர் சொற்பொழிவினை நிகழ்த்தியிருந்தார். ஆலய மண்டபத்தில் நடந்த கௌரவிப்பு நிகழ்வின்போது ஆலய பரிபாலன சபைத் தலைவர் எஸ். தில்லைநாதன் பாராட்டுரையை வழங்கியது டன், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ந.யோகானந்தக் குருக்கள் சொற்பொழிவாளருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (க)

# ஆலய உற்சவ நிகழ்வுகள்

### புத்தூர் குருநாதசுவாமி வருடாந்த உற்சவம்

புத்தூர் கிழக்கு குருநாதசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை 4ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 5ஆம் திகதி (வியாழக் கிழமை) தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவிருக்கிறது.

### மல்லாகம் ஞானவைரவர் மகாகும்பாபிஷேகம்

மல்லாகம் கோணப்புலம் ஞானவைரவர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை மணி 7.28 முதல் 8.58 வரையிலான சுப நேரத்தில் நடைபெறவிருக்கிறது. சிவாகமகிரியா தத்துவநிதி சிவஸ்ரீ இராம சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்திவைப்பார்கள்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். (க)

### சித்தன்கேணி நாககன்னி அம்பாள் மகா கும்பாபிஷேகம்

சித்தன்கேணி அருள்மிகு நாககன்னி அம்பாள் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை நடைபெறவிருக்கிறது. அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களும் இடம்பெறும்.

மகா கும்பாபிஷேகக் கிரியைகளை சித்தஞானகுரு இந்திரன் ஐயா நடத்திவைப்பார். சைவப்புலவர் க.நித்திய தசீதரன் ஆசியுரையையும், சைவப்புலவர் சைவசித்தாந்த கலாநிதி செ.கந்தசத்தியதாசன் வாழ்த்துரையையும் வழங்குவார்கள்.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரு தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் (க)

### சில்லாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மகா கும்பாபிஷேகம்

பண்டத்தரிப்பு, சில்லாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை மணி 8.45 முதல் 9.57 வரையிலான சுபநேரத்தில் நடைபெறவிருக்கிறது.

மகா கும்பாபிஷேகக் கிரியைகளை நயினைக்குருமணி சிவஸ்ரீ வை.மு.ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்திவைப்பார்கள். நிகழ்வின்போது சிவப்பிரம்மஸ்ரீ சோ.நடராசக் குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார். (க)

# வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் பிரச்சினைக்கு இரு வாரங்களில் தீர்வு - அமைச்சர் டக்ளஸ்



யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் புதிய அதிபர் பதவியேற்றமை தொடர்பில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதால் அதனை சுமூகமாக தீர்வு காண்பதற்காக நேற்று திங்கட்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அக்கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது அக்கல்லூரியில் பிரதி அதிபர் திருமதி செல்வ குணாலனைச் சந்தித்து பாடசாலையில் மாணவர்களை பிரச்சினை இல்லாது பார்த்துக் கொள்ளுமாறும் பழைய அதிபர் திருமதி முத்துக்குமரன் அதிபர் பதவியில் தற்காலிகமாக இருப்பார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அதிபர் பதவியேற்பு சம்பந்தமாக ஜனாதிபதியுடன் கதைத்துள்ளேன். விரைவில் இதற்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொடர்ந்தும் பாடசாலையில் அமைதி நிலமையைக் கொண்டு வாருங்கள். கல்லூரியைக் குழப்பமடைய விடவேண்டாம். இன்னும் இரு வாரங்களில் இதற்கு சரியான தீர்வு கிடைக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்த இதன்போது மேலும் கூறியுள்ளார்.

## யாழ்கோ விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம் இல.527, நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய வளாகத்தில் யாழ்கோவின் புதிய பால் பொருட்கள் விற்பனை கடந்த 2ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் இதனைத் திறந்து வைத்தார்.

# எம்.ரீ.வீ., எம்.பீ.சி.க்குத் தடை

2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பான ஒளிபரப்பு உரிமை தொடர்பான வழக்கு முடியும் வரை இப்போட்டிகள் தொடர்பான விளம்பரப்படுத்தல்களை மேற்கொள்ளவதை இடைநிறுத்துமாறு எம்.ரீ.வி, எம்.பி.சி நிறுவனங்களுக்கு கொழும்பு வர்த்தக நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2012 ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான ஏகபோக உரிமை தனக்கே உள்ளதாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இதனையடுத்தே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தேசிய ஒற்றுமையில் பங்கா




# இலங்கையின் விளையாட்

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்கள மானது இலங்கையில் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு பாரியளவில் பங்காற்றி வருகின்றது. 1966 ஆம் ஆண்டில் தேசியமயமாக்கல் அமைச்சின் கீழ் விளையாட்டுக்கள் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் மனித வளங்களின் அபிவிருத் திக்காக விளையாட்டுத்துறையின் பொறுப்புகளின் முக்கியத்துவம் கவனத்திற் கொள்ளப்பட்டு 1968 ஆம் ஆண்டில் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் அது பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழும் பின்னர் 1986 ஆம் ஆண்டில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழும் கொண்டுவரப்பட்டதுடன் 1996 ஆம் ஆண்டில் யூத்தர திணைக்களமொன்றாக தரமுயர்த்தப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் சுற்றுலா மற்றும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் கீழும் 2003 ஆம் ஆண்டில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் கீழும் 2004 ஆம் ஆண்டில் விளையட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் கீழும் கொண்டு வரப்பட்டு 2007 ஆம் ஆண்டில் இது விளையாட்டுத்துறை மற்றும் பொதுப் பொழுது போக்கு அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இது விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கி வருவதுடன் இலங்கையில் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்துக்கு பாரிய பாகம் ஒன்றை ஏற்று செயற்படுகின்றது. இந்தப் பாரிய கடமையை நிறைவேற்றுவதில் இத்திணைக்களத்தின் தொலை நோக்கு மற்றும் செயற்பணி கீழ் கண்டவாறு எடுத்துக்காட்டப்படுகின்றது.



நோயற்ற செயற்திறன் மிக்க சமூகத்திற்கும் எழுச்சி மிக்க நாட்டிற்கும் விளையாட்டு என்ற நோக்கத்தை முதன்மையாக கொண்டு செயலாற்றி வருகிறது.

விளையாட்டுத்துறை அபிவிருத்தியின் மூலம் இலங்கையர் செயற்திறன் மிக்கதும் நோயற்ற ஒழுக்கமுள்ள கௌரமான இனமொன்றாக உலகிற்குக் காண்பிக்கும் பின்னணியை உருவாக்கல்

## குறிக்கோள்கள்

விளையாட்டின் மூலம் நோயற்ற பிரஜைகளை நாட்டுக்கு வழங்குவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்கு தோள் கொடுத்தல்.

இன, மத நிற குல பேதம் கட்சி பேதம் இன்றி விளையாட்டுக்கள் மூலம் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்தல்.

விளையாட்டின் மூலம் இலங்கையின் பெயரை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லல்.

விளையாட்டுத்திறன் வாய்ந்த இளைஞர் யூவதிகளை இனங்கண்டு அவர்களைப் பேணிப் பாதுகாத்தலின் ஊடாக' திறமைளை மேம்படுத்தல்.

விளையாட்டுத்துறையின் எழுச்சிக்காக தேவையான பௌதிக வளங்கள் மனித வளங்கள் மற்றும் ஏனைய வளங்களை அபிவிருத்தி செய்தல்.

போட்டி மிக்க கல்வித் திட்டமொன்றுடன் கல்வியிலிருந்து பிரிந்து செல்வோரை விளையாட்டின்பால் நிலைத்திருப்பதற்கு கல்வியின் பகுதியொன்றாக விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்தல்.

## 01.மனித வள அபிவிருத்தி

விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் முறையான பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்.

விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்

வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை ஈடுபடுத்தி இலங்கை பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு புதிய தொழில்நுட் பங்களைப் பெற்றுக் கொடுப்பதன் பொருட்டு தொழில்நுட்ப செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விளையாட்டு விற்பன்னர்களை வரவழைத்து விளையாட்டு கருத்தரங்குகளை நடாத்துதல் உள்நாட்டில் போன்றே வெளிநாட்டு ரீதியாகவும் விளையாட்டுப் புலமைப் பரிசில்களை வழங்குதல்.

## 02.அடிப்படை வசதிகள் அபிவிருத்தி

சர்வதேச பயிற்சிகளுக்குப் பொருத்தமான விளையாட்டுக் கட்டடத் தொகுதிகளை நிறுவுதல்.

இலங்கையின் தேசிய மற்றும் மாவட்ட மட்டத்திலுள்ள விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தலும் நவீனமயமாக்கலும்.

கிராமப்புற விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல்.

விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.

## 03.தேசிய விளையாட்டுப் பொருவிழாவை நடாத்துதல்

தேசிய விளையாட்டுப் பெருவிழா 1969 இல் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் போட்டிகளை நடாத்துவதன் மூலம் ஆரம்பித்து 1972 ஆம் ஆண்டில் சிறந்த ஒழுங்கு முறையுடன் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது. இத் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் பிரதான குறிக்கோளாவது பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்திலுள்ள் போட்டிகளை நடாத்தி இறுதியில் மாகாண ரீதியான போட்டிகள் வரை திறமை வாய்ந்த விளையாட்டு வீர வீராங்கனையரை கொண்டு சென்று தேசிய மட்ட திறமையுள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளை இனங்கண்டு பல வகையான பயிற்சிகளை வழங்கி அவர்களை சர்வதேச மட்டதிதிற்கு ஈடுபடுத்தல்.

## 04.தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் குறிக்கோள்கள்

தேசிய விளையாட்டு சம்மேளனத்தைச் சார்ந்த விளையாட்டுச் சங்கங்களில் செயற்திறனுடன்கூடிய நிர்வாகத்தை உருவாக்கல்.

விளையாட்டு வீர வீராங்கனையரின் திறமைகளை இனங்கண்டு அவர்களை முன்னெடுத்துச் செல்லல்.

தேசிய விளையாட்டு குழாம்களை கொண்டு நடாத்துவதற்காக தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்

தேசிய விளையாட்டு பயிற்சித் திட்டங்களின் மேற்பார்வை முகாமைத்துவ மற்றும் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தல்.

நாட்டின் சகல மாவட்டங்களிலும் 15 - 20 வயதை உடைய நாட்டின் பல வகையான திறமைகளை கொண்டுள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளை மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுத்து குழாம்களாக பிரித்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

நாடு பூராவும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்ற இந்

# ற்றும்




# டுத்துறை

> “ நாட்டின் சகல மாவட்டங்களிலும் 15 – 20 வயதை உடைய நாட்டின் பல வகையான திறமைகளை கொண்டுள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளை மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுத்து குழாம்களாக பிரித்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. நாடு பூராவும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்ற இந் நிகழ்ச்சித்திட்டம் நீண்ட காலத் திட்டமென்ற வகையில் பல கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் ”

நிகழ்ச்சித்திட்டம் நீண்ட காலத் திட்டமென்ற வகையில் பல கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும்.
இந்நிகழ்ச்சித்திட்டம் நாளைய தினத்தின் கௌரவமான விளையாட்டு வீரர்கள் பரம்பரை ஒன்றை உருவாக்கி

விளையாட்டு வீர-வீராங்கனையரின் பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

மாவட்ட மற்றும் மாகாண மட்ட ரீதியாக வகைப்படுத்தி விளையாட்டு மைதானங்களில் தரவுகளைச் சேகரித்தலும் உபகரணங்கள் நிலைமையை கணக்கீடு செய்தலும்.
அரசு மற்றும் வெளியே விளையாட்டுத்துறையில்



விளையாட்டு வீர வீராங்கனையரிடையே சர்வதேச மட்டத்தில் வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளும் சூழ்க்கோளுடன் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டமொன்றாகும்.

### 05.நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படும் விசேட பணிகள்

மாவட்ட பயிற்சி குழாம்களை வலுப்படுத்தல்
விசேட திறமையுள்ள பயிற்றுநர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளல்.

பயிற்சி நிலையங்களை மேம்படுத்த தேவையான உபகரணங்களை வழங்குதல்.

பயிற்றுனர் குழாம்களை உருவாக்கல்

விசேட திறமை பொருந்திய விளையாட்டு வீர வீராங்கனையரை பயிற்சிகளில் சேர்த்துக்கொள்ளல்

தற்பொழுது செயற்பட்டு வரும் பயிற்சிக் காலங்களில் உள்ள விளையாட்டு வீர வீராங்கனையரின் மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்.

### • 06.விளையாட்டுத்துறை ஆரோக்கிய நடவடிக்கைகள் (போசாக்கு, ஊக்குவிப்புத் தொகை)

பழைய மற்றும் புதிய விளையாட்டுப் விற்பனர்களிடையே பரஸ்பர ஒன்றுகூடல்களை நடாத்துவதன் மூலம் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சர்வதேச வெற்றிகளைப் பெற்ற விளையாட்டு வீர வீராங்கனையருக்கு சின்னம் வழங்குதல்.

### 07.விளையாட்டுத்துறை தரவுகள் சேகரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நாட்டின் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள விளையாட்டு வீர வீராங்கனையர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் விளையாட்டு மைதானங்கள் மற்றும் உபகரணங்கள் பற்றிய புள்ளிவிபரங்களைச் சேகரித்தல். அத்துடன் விளையாட்டுத்துறையின் போது ஆராய்ச்சி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

பல வகையான விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ள சர்வதேச மட்ட விளையாட்டு வீர வீராங்கனையர் பற்றிய தகவல்களைச் சேகரித்தல். விளையாட்டுத்துறை கைநூல்களை அச்சிட்டு விநியோகித்தல்

ஈடுபட்டுள்ள பயிற்றுனர்கள் மற்றும் அலுவலர்களைக் கணக்கெடுத்தல்:

### 08. விளையாட்டு ஊடக இணைப்பு

தொலைக்காட்சி வானொலி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் விளையாட்டுத்துறை நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.

விளையாட்டு பற்றி விளையாட்டுகளில் ஈடுபட்டுள்ள அனைத்து பிரிவினர்களின் கௌரவத்தைப் பேணும் வகையில் உண்மையான ஊடகக் கலையைக் கட்டியெழுப்புதல்.

விளையாட்டுக்கள் பற்றிய வினாவிடை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மஞ்சரிகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

திறமைமிக்க விளையாட்டுத்துறை ஊடகவியலாளர்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.

போன்ற செயற்பாடுகள் இலங்கையில் விளையாட்டுத்துறையை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





தேசிய சமாதானப் பேரவையினரின் ஏற்பாட்டில் வட மாகாணத்திற்கான நல்லெண்ண சுற்றுலாவை மேற்கொண்டிருந்த கிழக்கு மாகாண சர்வமதப் பேரவையினர் மன்னார் சர்வமதப் பேரவையினரோடு சந்திப்பை மேற்கொண்டிருந்த போது எடுத்த படம்.

# சமூக சீரழிவுகளுக்கு எமது பொறுப்பற்ற தன்மையே காரணம்

## விரிவுரையாளர் கே.சிவாஜி

வலிகாமம்

இளைஞர்கள் சந்திக்குச் சந்தி நின்று கெட்ட பழக்கங்களை பழகுவதற்க்கும் மது போதையில் காணப்படுவதற்க்கும் சமூகத்தில் காணப்படும் பொறுப்பற்ற தன்மையே காரணமாக அமைகின்றது. சமூகம் தனது கடமையை உரிய முறையில் செய்யுமாக இருந்தால் இத்தகைய இளைய தலைமுறையினர் பாதை மாறிச்செல்லும் நிலமை எற்பட முடியாது என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறை விரிவுரையாளரான திருமதி கே.சிவாஜி குறிப்பிட்டார்.

அன்னை துர்க்காதுரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா ஆப்பாக் குட்டியின் நான்காவது ஈண்டு குருபூசை லேய அன்னபூரண்மணி மண்டபத்தில் தேவஸ்தானத்தலைவர் அறு திருமுருகன தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை ஆற்றிய திருமதி கே.சிவாஜி தொடர்ந்து உரையாற்றும் போது

இன்று நாம் பிள்ளைகளின் பழக்க வழக்கங்களை யிட்டு பெரிதும் கவலைப்படுகின்றோம். அடுத்த சந்ததி எந்த வகையில் வாழப் போகின்றது என்று யோசிக்கத் தொடங்கியுள்ளோம். இதனை வழிப்படுத்த வேண்டியதும் ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் சமூகத்திற்க்கு உண்டு .

இதனை விடுத்து சமூகம் தனது கடமையை உரிய முறையில் செய்யாது ஒதுங்கி நின்று கொண்டு சமூகம் கெட்டுவிட்டது என்பதில் எந்த வகையான பயனும் ஏற்படப் போவதில்லை.

பல் கலைக்கழகத்திலும் கூட சிறந்த மாணவர்களாக காணப்படும் பல மாணவாகள் புலமைப்பரிசில் பரிட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களாகும். வெறுமனே பாடசாலைகளின் ஆசிரியர்களைப் பெற்றோர்கள் திட்டிக் கொண்டு இருப்பதில் பயன் கிடைக்க மாட்டாது பெற்றோர்கள் குறிப்பாக அம்மாக்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டியதும் அவசியமாகும்.

எது நாகரீகம் எது அநாகரீகம் என்பதை பிள்ளைகளுக்கு கூற வேண்டிய பொறுப்பும் கடமையும் எம்மைப் போன்ற அன்னையர்களுக்கு உண்டு. அதனை விடுத்து நாகரீகம் என்றால் மேலைத்தேசத்தில் இருந்து வருவதுதான் என்று கருதக் கூடாது எமக்கென்று ஒரு நாகரீகம் பண்பாடு உண்டு அதனை நாம் பிள்ளைகளிடத்தில் வளர்த்தெடுக்க வேண்டும். எனவும் குறிப்பிட்டார்.

# நயினை நாகபூஷணி அம்மன் தேர்த் திருவிழாவில் தென்னிலங்கை மக்கள்



வரலாற்றுப் புகழ்மிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொள்வதற்காக தென்பகுதி உட்பட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான வர்கள் யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

இவர்கள் யாழ்.குடாநாட்டுக்கு வருவதற்காக தனியார் மற்றும் இ.போ.ச.பஸ்கள் விசேட மேலதிக சேவைகளை வழங்கி வருகின்றன.

குறிகட்டுவானுக்கான படகு சேவை களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடற்படையினர் மேலதிக படகுகளை சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர்.

பக்தர்களுக்கான குடிநீர் ஏற்பாடுகளை வேலணை பிரதேச சபை மேற்கொண்டது.

பக்தர்களுக்கான சுகாதார சேவைகள் மற்றும் அவசர மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர் நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# பொருளாதார அபிவிருத்தி மையம் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடல்

வவுனியா

தேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் வறுமையை ஒழிப்பதற்குமான பொருளாதார அபிவிருத்தி மையம் ஒன்றினை அமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று வவுனியா சுவர்க்கா கோட்டலில் இடம்பெற்றது.

ஆசிரியர் சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு கிழக்கில் உள்ள பொருளாதார வளங்களை எவ்வகையிலன பாவனைக்கு உட்படத்துவதன் மூலம் வறுமையில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பலாம் என்பது தொடர்பிலான கருப்பொருளில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

வவுனியா மாவட்டத்தில் பல்வெறு துறைகளிலும் உள்ள விற்பனர்களை உள்ளடக்கி இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு கிழக்கின் மண் வளம் நீர் வளம் கடல் வளம் மற்றும் ஏனைய உற்பத்திகளுக்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

அத்துடன் புலம்பெயர் மக்களின் மூலமாக எவ்வாறு எமது பிரதேசங்களை பொருளாதாரத்தில் அபிவிருத்தி மாற்றத்தை காணச் செய்வது என்பது தொடர்பிலும் அதற்கான முதல் மூலோபாயங்கள் எவையாக உ[illegible]ளது எனவும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாக மாவை சேனாதிராஜா, சுமந்திரன், தமிழரசுக்கட்சியின் வவுனியா அமைப்பளார் டேவிட்நாகநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

# ஆடியபாதம் வீதியில் ஆட்டோ விபத்து

வலிகாமம்

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் உள்ள மதகில் ஆட்டோ தடம் புரண்டதினால் ஆட்டோவில் வந்த நான்கு பேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கொக்குவில் கிழக்கு ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அம்பட்டன்பாலத்திற்க்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றது. குறிப்பிட்ட வீதியின் வடக்குப் பக்கமாக உள்ள வீதி மிகவும் ஆபத்தான நிலையில் சரிந்து காணப்படுவதே விபத்து ஏற்படுவதற்கான காரணமென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# திருமணவீட்டில் வாள் வெட்டு

வலிகாமம்

கொக்குவில் மேற்கில் திருமணத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் வாளினால் வெட்டி படுகாயப்படுத்திய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் மேற்கில் உள்ள பெண்ணொருவருக்கு வெளிநாட்டு மாப்பிளையுடன் திருமணம் நடைபெற இருந்தது. இந்நிலையில் குறிப்பிட்ட பெண்ணின் முன்னாள் காதலன் எனக் கூறிக்கொண்ட ஒரு இளைஞர் சக நண்பர் குழுவுடன் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று குழப்பம் ஏற்படுத்தியதுடன் பணம் கேட்டும் மிரட்டியுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து வெளிநாட்டு மாப்பிளை வீட்டார் நடைபெறவிருந்த திருமணத்தில் இருந்து விலத்தியதுடன் அதனை கைவிட்டும் உள்ளார்கள். இதனைத் தொடர்ந்து காலையில் ஏற்கனவே பெண்ணை காதலித்து ஏமாற்றியவர் என்று கூறப்படுபவருக்கும் பெண் வீட்டாருக்கும் இடையே கைகலப்பு எற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலையில் முன்னாள் காதலன் எனக் கூறப்பட்ட நபர் ஒரு குழுவுடன் வந்து பெண்ணின் உறவினரை வாளால் வெட்டி படுகாயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார்கள். தற்போது குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# கழுகுக் கண்கள்

இலங்கையில் இருந்து பொருளாதாரக் காரணங்களுக்காக தங்கள் குழந்தை, குட்டிகளுடன் படகுகளில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு அரசியல் புகலிடம் பெறுவதற்கு பலர் முயற்சி செய்து வருவது பற்றிய செய்திகளும், கிறிஸ்மஸ் தீவுக்கருகில் படகுகள் கவிழ்ந்து பலர் உயிரிழந்தமை பற்றிய செய்திகளும் என்னை மனவேதனைக்கு உட்படுத்தியது.

இதனால், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைப் போன்று வேகமாக ஆழ்கடலில் பறப்பதற்கு வலுவான செட்டைகளைக் கொண்ட நான், இவ்விதம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்பவர்கள் பற்றி ஒரு புலன் விசாரணையை நடத்தத் தீர்மானித்தேன்.

முதலில் நான் எனது வசதியான கூட்டில் இருந்து நீர்கொழும்பு கடற்கரைக்குப் பறந்தேன். அங்கு கடற்றொழிலாளர்கள் உரையாடிக் கொண்டிருப்பதை நான் அவதானித்தேன். அவர்களில் ஒருவர் இனிமேல் மீன்பிடித்து வாழ்க்கை நடத்துவது எளிதான செயல் அல்ல. நாம் வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்திச் செல்லும் ஆபத்தான தொழிலில் இறங்கினால் ஒரு வருடத்திற்குள் கோடீஸ்வரர்களாக மாறிவிடலாம் என்று மிகவும் இரகசியமாகப் பேசுவதை செவிமடுத்தேன்.

அதையடுத்து நான் சிலாபம் மற்றும் தென்னிலங்கையின் ஹிக்கடுவ, மாத்தறை மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து பார்த்தேன். இலங்கை வாழ் மக்கள் இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்களாவர். சிங்களவர்களும், முஸ்லிம்களும் கூட கூடுதல் வருமானத்தைப் பெற்று அவுஸ்ரேலியாவில் உல்லாசமாக வாழ்க்கை நடத்த முடியும் என்ற நம்பிக்கையில் தங்கள் வீடு வளவு ஆகியவற்றை விற்று இலட்சக்கணக்கில் இந்த ஆட்கடத்தல்காரர்களுக்கு பணம் கொடுத்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு படகுகள் மூலம் செல்கின்றார்கள்.

இவ்விதம் செல்பவர்களில் பலர் ஆழ்கடலிலேயே உயிரிழக்க வேண்டிய பரிதாபமான நிலையையும் எதிர்நோக்கி இருக்கின்றார்கள். தப்பித் தவறி அவர்கள் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் கடற்பாதுகாப்புப் படையினரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு அவுஸ்திரேலிய மண்ணில் இறங்கிவிட்டாலும், அவுஸ்திரேலியப் பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து சிறைக் கைதிகளைப்போன்று ஒரு மண்டபத்தில் வைத்து அடைத்து விடுகின்றார்கள். அவர்களுக்கு மூன்று வேளை சாப்பாடும், படுக்கை வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் அவர்களுக்கு வெளியில் செல்வதற்கான சுதந்திரமோ அவர்களின் கல்வித் தகுதிற்கேற்ற தொழில் வாய்ப்புகளோ என்றுமே கொடுக்கப்படுவதில்லை.

இதனால் இனிமேலாவது நம்நாட்டு மக்கள் எங்கள் நாட்டில் சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவதற்கு இருக்கும் வாய்ப்புகளைத் தூக்கி எறிந்துவிட்டு வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாகப் படகுகளில் சென்று தங்கள் வாழ்க்கையையே சீர்குலைத்து வாழ்நாள் பூராகவும் வேதனையை அனுபவிப்பதைக் கைவிட வேண்டும்.

இந்த வெளிநாட்டு ஆள்கடத்தும் கும்பல்கள் பற்றிய நான் அறிந்த இரகசியத் தகவல்களை பொலிஸாருக்கு இனிமேல் அறிவிக்கப்போகின்றேன். ஒவ்வொரு நாளும் கடற்கரையோரமாக நான் ஒரு தடவையாவது இலங்கையைச் சுற்றிப் பறந்து இவ்விதம் வெளிநாடுகளுக்கு ஆட்கள் கடத்தப்படுகின்றார்கள் என்ற ஒரு சந்தேகம் ஒரு படகைப் பார்த்தவுடன் தோன்றினால் அதுபற்றி உடனடியாக பொலிஸாருக்கும், கடற்படையினருக்கும் அறிவிப்பேன். எங்கள் நாட்டு மக்கள் அநியாயமாக தங்கள் வாழ்க்கையை சீர்குலைத்துக்கொள்வதை நிச்சயம் தடுக்கத்தான் போகின்றேன்.


கழுகுக் கண்களின் இந்தச் சமூகப் பணி தொடர்ந்துகொண்டிருக்கும்.



# உணவில் கட்டுப்பாடு எதற்காக?

தற்காலத்தில் யாரை உணவு அருந்தும்படி கேட்டாலும் நாம் உணவுக் கட்டுப்பாட்டில் இருக்கிறோம் என்பார்கள். இது எதற்காக அவர்கள் தங்களது உடல் எடையை குறைப்பதற்காக தானே.

பத்தியமான உணவு வகைகளை உட்கொள்வதன் மூலம் மட்டும் உடலின் எடை அதிகரிப்பதனை கட்டுப்படுத்த முடியாது. உணவுக் கட்டுப்பாட்டை பின்பற்றுவோரின் உடல் எவ்வாறு பருமனடைகின்றது என்பதனை பற்றி எப்போதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?




உண்மையில் உடல் எடையை குறைப்பதற்கு உணவுக் கட்டுப்பாடு மட்டும் போதுமானதல்ல. பத்தியமான உணவுகள் என வகைப்படுப்படுத்தப்பட்ட பல உணவுப் பொருட்கள் உடல் ஆரோக்கியத்திற்கு பாதகமானது என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

குறிப்பாக சிப்ஸ், கோலா வகைகள் போன்றன உடல் ஆரோக்கியத்திற்கு உசிதமானதல்ல. கட்டுப்பாடான உணவு வகைகளை அதிகமாக உட்கொள்வதனாலும் உடல் எடை உயர்வடைகின்றது. நாம் அனைவருமே கட்டழகான, எழிலான தோற்றமுடைய உடல் அமைப்பை பெற்றிருக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

எனினும் வேலைப்பளு, அழுத்தம் மற்றும் வேறு பொறுப்புக்கள் காணமாக எம்மால் உடற்பயிற்சி செய்வதற்கு போதியளவு நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடிவதில்லை. இதனால் அநேகமானவர்கள் உணவுக் கட்டுப்பாட்டு பழக்கங்களை பின்பற்றுவதில் அதிக நாட்டம் காட்டுகின்றனர்.

ஒன்றிரண்டு மணித்தியாலங்கள் கடுமையாக உடற்பயிற்சி செய்வதனை விடவும் வழமையாக உட்கொள்ளும் உணவு வகைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது சுலபமானது. உணவுக் கட்டுப்பாடு தொடர்பான பிழையான கருதுகோள்களினால் முன்பு இருந்ததை விடவும் இவர்கள் அதிகளவு பருமனடைகின்றனர்.

பல்வேறு உணவு வகைகளை உட்கொள்வதன் மூலம் உடலின் எடையை குறைக்க முடியும் என கருதுகின்றனர். எனினும் அவற்றின் கலோரிப் பெறுமதியை உன்னிப்பாக அவதானித்தால் வழமையாக உட்கொள்ளும் உணவுப் பொருட்களையும் விடவும் அதிகமானவை என்பது புலனாகும்.




குறைந்த கலோரியுடைய பானங்களில் இனிப்புச் சுவையூட்டிகளாக பயன்படுத்தப்படும் செயற்கைப் பொருட்கள் உங்களின் உடல் எடையை மேலும் அதிகரிக்கக் கூடும் என அமெரிக்க ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த பானங்களில் காணப்படும் இனிப்புச் சுவையூட்டிகள் அதிக பசியை ஏற்படுத்தி நீங்கள் அதிகமாக உணவு உட்கொள்ள வழிவகை செய்வதாகத் தெரிவித்துள்ளனர். சிறந்த உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு சுத்தமான நீர் மிகவும் உசிதமானது. எனினும் சுவை விரும்பினால் இயற்கையான பழச்சாறுகளை சுத்தமான நீருடன் கலந்து பருக முடியும்.

பழச்சாற்றை விடவும் நீரின் அளவை அதிகரிப்பதன் மூலம் கலோரி அளவை வரையறுக்கலாம். தேசிக்காய் சாறு உணவு சமிபாட்டுக்கு உதவியாக அமையும். பருப்பு அல்லது விதை வகைகளை உட்கொள்வதன் மூலம் அதிகளவு புரதச் சத்து கிடைப்பதுடன் ஓர் நிறைவான அனுபவம் ஏற்படுகின்றது. ஓட் கேக்: ஓட் கேக் அல்லது புல் அரிசி கேக் வகைகள் நார்ச் சத்து அதிகமான சிறந்த ஆரோக்கியமான உணவாகும்.

## கோடைக்கு ஏற்ற உணவுப் பழக்க வழக்கம்

கோடை காலத்தில் உணவு விஷயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டியது மிகவும் அவசியம். சாப்பாடு மற்றும்



நீராகாரமாக அருந்தும் பானங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உடலுக்கு உஷ்ணத்தை ஏற்படுத்தும் உணவுப் பதார்த்தங்களைத் தவிர்த்து விட்டு, குளிர்ச்சியை கொடுக்கும் உணவுகளை சாப்பிட வேண்டும்.

எலுமிச்சை சாறு, இளநீர் போன்றவற்றைக் குடிக்கலாம். நீர்த்த மோர் குடிக்கலாம். சீனி அதிகம் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

மேலும், வடை, அப்பளம், சமோசா, சிப்ஸ், பஜ்ஜி போன்ற எண்ணெய் பண்டங்களையும் தவிர்க்க வேண்டும். சூடான, மசாலா உணவுப் பதார்த்தங்களை அறவே தவிர்க்க வேண்டும். உணவில் சாலட் அதிகம் சேர்த்துக் கொள்வதும் நல்லது.

அதிகக் காரமான உணவுகளை சாப்பிட வேண்டாம். கடைகளில் விற்கப்படும் குளிர்பானங்களை வாங்கிக் குடிப்பதை முற்றிலுமாகத் தவிர்த்து விடுங்கள்.

## வயிற்றுக்கோளாறுகளை நீக்கும் புதினா:



புதினா இலையின் சாற்றை தலைவலிக்குப் பூசலாம். ஆஸ்துமாவை புதினா கட்டுப்படுத்துகின்றது. வறட்டு இருமல், இரத்தசோகை, நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றுக்கும் புதினா சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. பல் ஈறுகளில் உண்டாகும் நோய்களையும் புதினா குணப்படுத்துகிறது. புதினாவை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் இரத்தம் சுத்தமாகும். ஊளைச்சதையைக் குறைப்பதற்குப் புதினா சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. வயிற்றுப் புழுக்களை அழிக்கவும், வாயுத் தொல்லையைப் போக்கவும் புதினா உதவுகிறது.

புதினா கீரையுடன் சின்ன வெங்காயம், மிளகு, பூண்டு, சீரகம் கலந்து கொதிக்க வைத்து அதனுடன் சிறிது எலுமிச்சம் பழச்சாறு சேர்த்து அருந்தினால் வாயுத் தொல்லை, வயிற்றுக் கோளாறுகள், சிறுநீரக கல்லடைப்பு போன்றவை நீங்கும். இந்த கசாயத்தை குழந்தைகளுக்கு கொடுத்து வர அவர்களுக்கு மலக்குடலில் உள்ள பூச்சிகள் சரியாகும்.

புதினா இலைகளை மட்டும் கிள்ளி எடுத்துச் சுத்தம் செய்து அதை வெய்யிலில் நன்றாகக் காய வைக்க வேண்டும். நன்கு காய்ந்த பின் அதை எடுத்து எட்டில் ஒரு பங்கு சோற்று உப்பை (8:1) அத்துடன் சேர்த்து உரலில் போட்டு நன்றாக இடிக்க வேண்டும் தூளான பின் அரித்து எடுத்து போத்தலில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பற்பொடியை தினசரி உபயோகித்து வந்தால் ஆயுள் வரை பல் சம்பந்தமான எந்த ஒரு நோயும் வராது. வாய் துர்நாற்றத்தை புதினா போக்குகிறது.

## குடல் தொழிற்பாட்டுப் பிரச்சனை - நோய் அறிகுறிகள்

**1. வயிற்றுநோவு**


வயிற்று நோவானது வயிற்றின் எந்தப்பகுதியிலும் ஏற்படலாம். வயிற்றுநோவானது தொடர்ச்சியாக ஏற்படுவதில்லை. நோவின் தீவிரம் நேரத்திற்கு நேரம் வேறுபடும். ஆட்களுக்கும் வேறுபடும். மலம் கழித்தபின்னர் வயிற்றுநோவின் அளவில் குறைவு ஏற்படும்.

**2. வயிறு வீக்கமுற்று**

இருப்பது போன்ற உணர்வு ஏற்படலாம். அத்துடன் வழமைக்கு மாறாக கூடியளவு வாயு குதத்தினூடாக வெளியேறலாம்.

**3. மல வெளியேற்றம்.**

சிலருக்கு வயிற்றோட்டமும் வேறு சிலருக்கு மலச்சிக்கலும் வேறு சிலருக்கு இரண்டும் மாறிமாறியும் ஏற்படுகின்றது. சிலருக்கு மலம் திரவமாகவும்



சிலருக்கு அதிகளவு சீதமும், வேறுசிலருக்கு சிறு சிறு துண்டுகளாகவும் வெளியேறும். மலம் கழித்தபின்னர் முற்றாக மலம்கழிக்காமைபோன்ற உணர்வு ஏற்படலாம். சிலருக்கு மலம் கழிக்க வேண்டிய உணர்வு வந்தவுடன் அதனை அடக்க முடியாமல் உடனடியாக மலசல கூடத்திற்குச் செல்ல வேண்டியது போன்று இருக்கும். போதுவாக காலை வேளைகளில் காலை உணவு உண்ட பின்னர் இவ்வாறாக பல தடவைகள் மலசல குடத்திற்கு செல்ல வேண்டி ஏற்படும்.

**வேறு குணங்குறிகள்:**

(i) வாந்தி வருவது போன்ற உணர்வு, தலைவலி, உணவில் விருப்பமின்மை.
(ii) தசை நோவு.
(iii)முதுகுவலி.
(iv)உடற்சோர்வு.
(v) குறைந்த உணவில் வயிறு நிறைவது போன்ற உணர்வு
(vi) சாப்பிட்டபின் உணவு வெளியே வருவது போன்ற உணர்வு.
(vii) சிறுநீர் சம்மந்தமான நோய் குணங்குறிகள். (உதாரணமாக சிறுநீர் கழிக்கவேண்டிய தடவைகள் அதிகரிக்கலாம்.)

மலத்துடன் குருதி வெளியேறினால் இது பற்றி வைத்தியருக்கு தெரிவித்தல் மிக முக்கியமானதாகும்.

சிலருக்கு நோய்குணங்குறிகளின் தீவிரம் குறைவாகவும் சிலருக்கு அதிகளவிலும் காணப்படும் பெரும்பாலும் சில காலங்களில் நோய்த்தீவிரம் அதிகரித்து பின்னர் குறைவடைந்து மீண்டும் வேறொரு காலத்தில் அதிகரிக்கலாம்.

## இரத்த ஓட்டத்தினை அதிகரிக்கும் வேதிப் பொருள் மிளகாயில் உள்ளதாம்!

காரசாரமான உணவிற்கு முக்கிய காரணமாய் இருப்பது மிளகாய். நமது சமையலில் மிளகாய்க்கு சிறப்பான இடம் உண்டு. இது ஊசி மிளகாய், குண்டு மிளகாய், குடமிளகாய் என மூன்று வகைகளைக் கொண்டது.

இவை காரத்தன்மையால் வேறுபடுகின்றன. குடமிளகாய் காரம் குறைந்தது. இத்தாவரத்தின் காய் சமையலுக்கும், கனிந்த கனிகள் மற்றும் விதைகள் நறுமணப் பொருளாகவும், மருந்தாகவும் பயன்படுகின்றன.

**இரத்த ஓட்டத்தினை அதிகரிக்கும்**

விதைகளுடன் கனிகள், ஜீரணத்தை ஊக்குவித்து உடலுக்கு வலுவேற்றுகிறது. தசைக் குடைச்சல் வலியை போக்கும் தன்மை கொண்டது. கிருமி நாசினியாக செயல்படுகிறது. வியர்வை மற்றும் இரத்த ஓட்டத்தினை அதிகரிக்கும். வலி போக்கும் மருத்துவத்தில் பயன்படுகிறது.

# நாத்திகத்தின் வரலாற்றுப் பயணம்

## ஜிம் ஹெற்றிக்

நாத்திகத்தின் பயணம் மனித வரலாற்றுக்கு இணையாகப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே துவங்கியது. நாத்திகத்தின் போராட்டம் தொடர்கிறது. நம் கடந்த காலத்தை அறிவது அவசியம். முதலாவதாக நாம் நம்பிக்கையாளர்களாக இருந்தோம். பின்னரே சிந்தனையாளர்களாக மாறினோம் என மதவாதிகள் கூறுகின்றனர். நாத்திகம் என்பது மதங்கள் உருவாகி நிலைத்த பின் உருவான குதர்க்க சிந்தனையே என அவர்கள் தவறாகக் கூறுகின்றனர்.

எனவே நாத்திகத்தின் கடந்த காலத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளா விட்டால், நிகழ்காலத்தையும் புரிந்துகொள்ள முடியாது. நமது வெற்றிகள், தோல்விகள், உயர்வு, வீழ்ச்சி ஆகியவற்றை அறியாவிடில், நாத்திகத்தின் வலிமையை உணரவோ, எதிர்காலத்தில் அதன் வழியில் நடைபோடவோ முடியாது போய்விடும்.

மனிதன் பதிவு செய்த வரலாற்றுக் காலத்திற்கு முந்தியது நாத்திகத்தின் வரலாறு. சிந்திக்கத் துவங்கிய மனிதன் கேள்விகளை எழுப்பினான்.

**வாழ்க்கை என்பதே அறியாமை**
**இருளில் நடத்தும் போராட்டமே.**
**இருளில் சிக்கிய குழந்தை குழம்பி,**
**திணறும் அனைத்தும் அதை**
**அச்சுறுத்தும். ஆனால் நாம் அந்தக்**
**குழந்தை போலப் பகலிலும்**
**அர்த்தமற்ற கற்பனை அச்சத்திலும்**
**வாழ்கிறோம். இந்த பயம் சூரிய**
**ஒளியால் நீங்காது. உள்ளார்ந்த**
**புரிதலும், இயற்கையின் இயக்கவியல்**
**தெளிவும்தான் இந்த அச்சத்தைப்**
**போக்கும் என லுக்கிரீட்ட எழுதினார்.**

அவை குகைக்கால மனிதனின் ஆதி மத நம்பிக்கைகள் போன்ற சித்திரங்களாகப் பதிவாகியுள்ளன. இது என்ன அற்புத உலகம்? இது எப்படி உருவானது? நமது வாழ்வை நிர்ணயிப்பது எது? நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் எங்கே போகப் போகிறோம்? என்று வரிசையாகக் கேள்விகளே முதலில் மனிதனின் மனதில் எழுந்தன. ஆனால் அவநம்பிக்கை கொண்ட பதில்களே அவனுக்குக் கிடைத்திருக்கக்கூடும் என நினைக்கிறேன்.

### பழங்காலம்

உலகின் முதல் நாத்திகச் சிந்தனை இந்தியாவிலும், கிரீசிலும் தான் உருவாகி இருக்கமுடியும் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

இந்தியாவில் முதல் நாத்திகச் சிந்தனை மரபான சாருவாகம் கி.மு.ஆறாம் நூற்றாண்டில் தோன்றியது. அது ஒரு தனிமனித சிந்தனையா, குழுவின் போக்கா அல்லது மக்கள் எழுச்சி இயக்கமா என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவர்கள் புனித நூல்கள் என்பன பொய்யே என்றனர். கடவுள் என்பதும், மனிதனை விஞ்சிய உயர்சக்தி என்பதும், அழிவற்ற ஆன்மா என்பதும் பொய். நேரடியாக அறிவது மட்டுமே உண்மை என்றனர். சாருவாகம் அல்லது லோகாய்தம் என்பது இந்த சிந்தனையையே முன்னிறுத்துகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சந்தேகப் படுவது என்பது இருந்தது. நம்பிக்கை என்பது மதத்தின் தனியுடைமையாகவும் இருக்கவில்லை. நாத்திகத்தை விமர்சிக்கும் எதிர்மறைச் சிந்தனையாகவே நம்பிக்கையின்மை என்பது வெளிப்படுகிறது. உதாரணமாக ஹீப்ரு வரலாறு. கவிதை, நம்பிக்கைகள் ஆகியவற்றைக் கூறும் பழைய ஏற்பாட்டில் ஷஷமுட்டாள்கள் தங்கள் மனங்களில் சொல்லிக் கொண்டார்கள். கடவுள் இல்லையென்று" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முட்டாள் தனமாகவோ, புத்திசாலித்தனமாகவோ அந்தக் காலத்திலும் கடவுள் இல்லையெனும் நாத்திக சிந்தனை இருந்துள்ளது என்பதை இது காட்டுகிறது.

காரணம் கண்டுபிடிப்பதால் மட்டும் உறுதி உண்டாகுமா? வாழ்க்கை என்பதே அறியாமை இருளில் நடத்தும் போராட்டமே. இருளில் சிக்கிய குழந்தை குழம்பி, திணறும் அனைத்தும் அதை அச்சுறுத்தும். ஆனால் நாம் அந்தக் குழந்தை போலப் பகலிலும் அர்த்தமற்ற கற்பனை அச்சத்திலும் வாழ்கிறோம். இந்த பயம் சூரிய ஒளியால் நீங்காது. உள்ளார்ந்த புரிதலும், இயற்கையின் இயக்கவியல் தெளிவும்தான் இந்த அச்சத்தைப் போக்கும் என லுக்கிரீட்ட எழுதினார்.

இக்கருத்து நாத்திக வரலாற்றின் முன் நகர்வில் முக்கியமான ஒன்று. நமது மன இருளைப் போக்கவும், அறிவு இருட்டை விரட்டவும் வெறும் சூரிய ஒளியால் மட்டும் முடியாது.

### மறுமலர்ச்சிக் காலம்

ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் கிறிஸ்துவம் தலைதூக்கியது. அதன் துவக்க காலம் முழுதும் பதிவு செய்யப்படாத இருண்ட காலமாகவே இருந்தது. நாத்திகத்தின் வளர்ச்சிப்பாதை எப்போதும் ஒன்றுபோல சீரான முன்னோக்கிய பயணமாகவே அமைந்துவிடவில்லை. கி.பி.400 முதல் 1400 வரையான ஓராயிரம் ஆண்டுகள் தேக்கமும், பின்னடைவும் கொண்டதாகவே நாத்திக வரலாறு இருந்தது. மறுமலர்ச்சிக் காலத்தில் எழுச்சியுடன் மனிதாபிமான நாத்திகமும் எழுச்சி பெற்றது. அரபுச் சிந்தனை மரபு, புதிய ஐரோப்பிய நாத்திகச் சிந்தனையின் எழுச்சிக்குத் துணை நின்றது. கவிதை, இலக்கியம், ஓவியம், சிற்பம் என கலைகளின் கற்பனையில் மறுவுலகத்தை விடவும் வாழும் உலகின் நிதர்சனமும், உண்மையும் பெரிதும் இடம்பெற்றன. மனித வாழ்வின் உண்மை நிலை பற்றியும் அதன் முக்கியத்துவம் குறித்தும் மனிதகுலத்தின் சிந்தனை மாற்றம் பெற்றது.

மறுமலர்ச்சி காலத்தின் மகத்தான சிந்தனையாளர் மாண்டக்னி (1533-1592) அவர் தனது அறையின் சுவற்றில் "நான் மனிதன், மனிதன் சார்ந்த எதுவும் எனக்கு எதிரானதல்ல" என்று எழுதி வைத்திருந்தார். "எனக்கு என்ன தெரியும்?" என்ற கேள்வியை ஒரு தகட்டில் பதித்திருந்தார். அதன் பின்புறம் உறுதியானது என்பதெல்லாம் உறுதியானதல்ல என்பதே உறுதியானது என்று பதிந்து வைத்திருந்தார்.

### அறிவொளிக்காலம்

பதினெட்டாம் நூற்றாண்டு அறிவின் எழுச்சி ஒளிவிட்டுப் பிரகாசித்த காலம். நாத்திகம் வெற்றி முழக்கங்களுடன் பவனி வந்தது. வால்டேர் 1694-1778 மதத்திற்கு எதிரான பேரெழுச்சியை உண்டாக்கிய பிரெஞ்சு அறிஞர். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். சமூக விமர்சனக் கிண்டல்கள் அவர் ஒரு ஒரு நாத்திகர் என்பதை விடவும் கடவுளை நம்பி மதத்தை மறுப்பவர் எனலாம்.

ஆதிக்க மதத்திற்கு எதிரான வலுவான தர்க்கத்தை நடத்தியவர். கத்தோலிக்க மதத்தை அவர் கடுமையாக விமர்சித்தார். கருத்து சுதந்திரத்தை பெரிதும் போற்றியவர். கருத்துகள் எவ்வளவு முரண்பட்டனவாக இருந்தபோதும் கதை சொல்லும் உரிமை மனிதனுக்கு தரப்பட வேண்டும் என்றார். சகிப்புத் தன்மையின் சாசனம் எனும் அவரது நூல் சகிப்புத்தன்மை வளர்ந்தால் நாத்திகம் வளரும். கடவுள், மத நம்பிக்கை சகிப்புத் தன்மையை ஏற்பதில்லை. முழுமையான சுதந்திரமும், பேச்சுரிமையும் உள்ளவர்களே சகிப்புத்தன்மை கொண்டவர்களாக இருக்க முடியும் என்றார்.

### நவீன காலம்

19-20 ஆம் நூற்றாண்டுகளில் நாத்திகம் விரைந்து நடைபோட்டு முன்னேறியது. நாத்திகம் மற்றும் மதச் சார்பின்மை உணர்வு, உழைக்கும் வர்க்கத்திடையே வேர்விட்டது. அறிவுஜீவிகளும் நாத்திகத்தின் பால் ஈர்க்கப்பட்டனர். சார்ல்ஸ் ப்ராட்லா (1833-1891) தலைமையிலான பிரிட்டிஷ் தேசிய மதச்சார்பற்ற சொசைட்டி நாத்திகப் பிரச்சார முன்னோடியானது. ப்ராட்லா தனது அறிவுசார்ந்த அணுகுமுறையால் மதச்சார்பின்மை மற்றும் மதம் பற்றிய தெளிவை உண்டாக்கி பிரிட்டனை நாத்திகத்தின்பால் ஈர்த்தார். நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பெரும் புரட்சிக்கு வித்திட்டார். இத்தாலிய நாத்திகர்களுடனும் இந்திய நாத்திகர்களுடனும் உறவாடி நாத்திகக் கருத்துக்களை வளர்த்தார். மதம் என்பது படிப்படியாக உலர்ந்து உதிர்ந்து போய்விடும். முடிவாக நாத்திகமே உலகம் முழுவதும் வெற்றி நடைபோடும் என்றார்.

### நாத்திகத்தின் நிகழ்காலமும் எதிர்காலமும்

21ஆம் நூற்றாண்டு நாத்திகத்தின் நூற்றாண்டாகுமா? நாத்திக மனிதாபிமானத்தின் எதிர்காலம் என்ன? வரையறையற்ற கலாசாரப் புரட்சியின் வன்முறையாலும் நாத்திகம் மதவாதச் சர்வாதிகாரிகள் மனிதாபிமான நாத்திகத்தைத் தாக்கவும், குறை காணவும் இவர்கள் வாய்ப்பளித்துவிட்டனர். எனினும் ஐரோப்பிய சமூகத்தின் 70 விழுக்காட்டினர் எந்தவிதமான மதச் சடங்கு சம்பிரதாயங்களையும் பின்பற்றுபவர்கள் இல்லை. குறைந்தது 30 விழுக்காட்டினர் நாத்திகர்கள் அல்லது கடவுள் கவலையற்றவர்கள்.

2050இல் முறைப்படி ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாலயம் சென்று பிரார்த்தனை நடத்துவோர் வெறும் 0.1 விழுக்காடாகவே இருப்பர் என்பது கணிப்பு. மதமற்ற, மதச்சார்பற்ற சமூகமாக ஐரோப்பா வளர்ந்து வருகிறது.

சமீபத்தில் இங்கிலாந்தில் பேருந்துகளில் நாத்திகப் பிரச்சார விளம்பரங்கள் செய்ய நிதி வசூலிக்கப்பட்டது. அதில் "கடவுள் என்பவர் இல்லாமலிருக்கலாம். எனவே கடவுளைப் பற்றிய கவலையை விட்டு மகிழ்ச்சியுடன் வாழுங்கள்" என்ற வாசகம் ஒட்டப்பட்டது. இன்னும் பிரிட்டனில் தேவாலயங்கள் அதிகார மையங்களாகவே உள்ளன. நாடாளுமன்றத்தில் பிரார்த்தனை நடத்தப்படுகிறது. அங்கு பிஷப்புக்கு சிறப்பான இடம் தரப்படுகிறது. பிரான்சில் அரசையும் மதத்தையும் தனிதனியாக அணுகும் போக்கு போப்பின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால், இதற்கு எதிர்ப்பும் எழுந்தது. ஐரோப்பிய யூனியனுக்கு கிறிஸ்துவ அடையாளத்தைத் தர தேவாலயங்கள் பெரிதும் முயன்றன. மதச்சார்பற்ற நாத்திகர்களே இந்த முயற்சிகளை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இங்கிலாந்தில் மத அவதூறுச் சட்டம் ஒழிக்கப்பட்டது. ஆனால் மத வெறுப்புக்கு எதிரான சட்டம் உள்ளது. அதன் மூலம் மதங்களை விமர்சிப்பதைத் தடுக்க முடியும்.

இன்றைய உலகம் மதங்களுக்கும் நாத்திகத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டுள்ளது. நாத்திகத்தின் முன்னேற்றத்திற்கு வாய்ப்புள்ளபோதும் நிறையக் கடமைகள் காத்து நிற்கின்றன. 21ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் நின்று கொண்டுள்ள நாம் அத்தனை எளிதாகவும் உறுதியாகவும் நாத்திகத்தின் எதிர்காலம் இப்படித்தான் இருக்கும் என்று கூறிவிட முடியாது. நம்பிக்கைகள் போலவே அச்சுறுத்தலும் நம்மை எதிர்நோக்கியுள்ளன.

அடுத்த 100 ஆண்டுகளின் முக்கிய பிரச்சினை ஆத்திகமா நாத்திகமா என்பது அல்ல. கடவுளை நம்புவதா மறுப்பதா என்பது அல்ல மனிதகுலம் வாழும் ஒரே வீடான இந்த பூமி பருவநிலை மாற்றம், பூமி சூடாதல், ஓசோன் படலம் கிழிதல் ஆகியவற்றால் நிலைகுலைந்து அழிந்து போகுமா என்பதே அனைவருக்கும் பொதுவான பிரச்சினை. நீ கிறித்துவனா? இஸ்லாமியனா? இந்துவா? பௌத்தனா, நாத்திகனா என்பனவெல்லாம் கெட்டுப்போன தண்ணீருக்கும் விஷமான காற்றுக்கும் பெருக்கெடுக்கும் வெள்ளத்திற்கும் சீறியெழும் சுனாமி அலைக்கும் வாட்டும் பஞ்சத்திற்கும் தெரியவா போகின்றது?

இந்த உலகம் நமது. நமது ஒரே வீடு. நமக்கே உரியது. இது எந்தக் கடவுளுக்கும் உரியதல்லவே.

**நீ கிறித்துவனா?**
**இஸ்லாமியனா? இந்துவா?**
**பௌத்தனா, நாத்திகனா**
**என்பனவெல்லாம் கெட்டுப்போன**
**தண்ணீருக்கும் விஷமான**
**காற்றுக்கும் பெருக்கெடுக்கும்**
**வெள்ளத்திற்கும் சீறியெழும்**
**சுனாமி அலைக்கும் வாட்டும்**
**பஞ்சத்திற்கும் தெரியவா**
**போகின்றது? இந்த உலகம்**
**நமது. நமது ஒரே வீடு. நமக்கே**
**உரியது. இது எந்தக்**
**கடவுளுக்கும் உரியதல்லவே.**

தமிழாக்கம்:
டாக்டர் ஜீவானந்தம்
சமுதாய விஞ்ஞானம்

# சமய பண்பாட்டியலுடன் இணைந்த பாரம்பரியமான பாத யாத்திரை

ஒவ்வொருவரது வாழ்விலும் சமயமானது வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்துள்ளது. வாழ்விலிருந்து சமயத்தையும், சமயத்திலிருந்து வாழ்வையும் பிரித்து நோக்க முடியாது. அவ்வாறு வாழ்வோடு இணைந்த சமய வழிபாட்டுமுறை சமயத்துக்குச் சமயம் வேறுபடக் கூடியது. ஒரே சமயமாக இருப்பினும் அது நாட்டுக்கு நாடு பிரதேசத்துக்குப் பிரதேசம், ஊருக்கு ஊர் மாறுபாடுடையது.

ஆனால் எல்லா சமயத்தவரிடமும் வழக்கத்தில் உள்ள வழிபாட்டு முறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது யாத்திரை செல்லுதல் (Pilgrimage) என்பதாகும். அதாவது புனிதத் தலங்களை நோக்கிச் சென்று வழிபட்டு வருதல். அவ்வாறு யாத்திரை செல்லும் தலங்கள் யாத்திரைத் தலங்கள் எனப்படும். அவ்வாறான தலங்களுக்கு நடந்து செல்லுதல் பாத யாத்திரை எனப்படும். இவ் யாத்திரை செல்லுதல் எனும் வழிபாட்டு முறை சைவசமயத்தவர்களது வழிபாட்டுமுறையில் மிகவும் பழைமைவாய்ந்ததாகும். இதை தல யாத்திரை என்று சிறப்பித்துக் கூறுவர்.

சங்கமருவிய காலத்திலிருந்தே யாத்திரை செல்லுதல் என்பது பேணப்பட்டு வந்துள்ளது. காரைக்காலம்மையார் காலாலே நடந்து சென்று இறைவனைத் தொழுததுடன், தலையாலும் நடந்து சென்று வழிபட்டமை பற்றிய குறிப்புகள் பல புராண வரலாற்றில் உள்ளன. அவர் உண்மையில் தலையாலே நடந்து சென்றாரா இல்லையா என்பதல்ல முக்கியம், அவர் புனிதத்தலங்களுக்கு யாத்திரை சென்றுள்ளார் என்பதுதான் உண்மை.

இதனைத்தொடர்ந்து பல்லவர் காலத்தில் யாத்திரையானது மேம்பாடு அடைந்தது. இதற்கான காரணம் இக்காலத்தில் கல்லாலானதும், பெரியதுமான ஆலயங்கள் எழுந்தன. இதனால் ஆலயங்களைத் தரிசிக்கும் வழக்கம் ஏற்பட்டது என்று கூறுவதையும் விட அதிகரித்தது எனச் சொல்லலாம். அதுமட்டுமன்றி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய தேவார முதலிகள் தாங்கள் ஆலயத்திற்குச் செல்வதோடு, தம்மோடு அடியார் கூட்டத்தையும் ஆலயங்களுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இதில் முக்கியமாக இடம்பெறுபவர் திருஞானசம்பந்தர். இத்தேவார முதலிகள் தாங்கள் யாத்திரை செல்லும்போது ஏனையோரும் அத்தலங்களைப்பற்றி உணரும் பொருட்டு அத்தலங்களின் சிறப்பையும் உணர்த்தியுள்ளனர். அத்துடன் தலயாத்திரை செல்வதன் பயன்பற்றியும் பாடியுள்ளனர். இதனால் யாத்திரை செல்லும் வழக்கம் பரவலடைந்தது. ஒவ்வொரு விரத தினங்களும் ஒவ்வொரு ஆலயங்களுடன் தொடர்புள்ள வகையில் சிறப்பு இருந்தது இதன்படி அக்காலங்களில் அந்தந்த ஆலயங்களிற்குச் செல்வர். உதாரணமாக கார்த்திகை தீபம் நாளில் திருவண்ணாமலை, சிவராத்திரி நாளில் சிதம்பரம், கந்தசஷ்டி நாளில் திருச்செந்தூர் என ஒவ்வொரு தலங்களும் ஒவ்வொன்றுக்குச் சிறப்பிக்கப் படுகின்றன.

இதேபோல் இலங்கையிலும் இத்தலயாத்திரை பயன்பாட்டில் உள்ளன. இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு யாத்திரை செல்லும் வழக்கமும் உள்ளன. இலங்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் நீண்டதுமான யாத்திரை கதிர்காம யாத்திரை ஆகும். சைவமக்கள் மட்டுமன்றி இங்கு பௌத்தர்கள் முதல் கிறிஸ்தவர்கள் வரை அனைத்துச் சமயத்தைச் சார்ந்தோரும் யாத்திரை செல்வர்.

ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் அதன் திருவிழாக் காலத்தில் கதிர்காமத்திற்கு நேரடியாகச் செல்வதும் உண்டு. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் செல்லும் சைவ மக்கள் தமது யாத்திரையை மாவிட்டபுரத்தில் ஆரம்பித்து நல்லூர் ஊடாக பொலிகண்டி கந்தவனக் கடவையைத் தரிசித்து, தொடர்ந்து தொண்டமானாறு செல்வச்சந்நிதியில் வழிபாடு செய்தபின்னர் முல்லைத்தீவு சென்று அங்கு வற்றாப்பளை அம்மன் கோயில் விசாகப் பொங்கலை முடித்து, கிழக்கு மாகாணத்தின் அக்கரைப்பற்று ஊடாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரரை வழிபட்டு கதிர்காமம் ஆடிவேல் விழாவிற்குச் சென்றடைவர்.

உண்மையில் தலயாத்திரை என்பது பாதயாத்திரையாகவே ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான காரணம் முன்னைய காலத்தில் போக்குவரத்து, தொடர்பாடல் வைத்தியம் எனும் துறைகள் முன்னேற்றமடையாத நிலையிலிருந்து. அக் காலத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்ல வேண்டுமெனில் நடைப்பயணமாகவோ, மாட்டுவண்டிகளிலோதான் செல்ல வேண்டியிருந்தது. அத்துடன் மாவிட்டபுரம், நல்லூர், கந்தவனக்கடவை, முல்லைத்தீவு போன்றவை திரிகோண நிலையங்களாக புவியியல் ரீதியில் தொலைவிலும் அமைந்திருந்தன. இந்த ஆலயங்களிற்கு பாதயாத்திரையாக நடந்து செல்லும்போது அதன் தொலைவு காரணமாக பல நாட்கள் செல்லும். இவ் ஆலயங்களின் திருவிழாக் காலத்திலோ அல்லது விரத நாட்களை முன்னிட்டோ அவ்வப் பிரதேசங்களிலிருந்தும், வேற்றுப் பிரதேசங்களிலிருந்தும் பாதயாத்திரையாக வருவர். இயலாதவர்களும், பெண்கள், குழந்தைகள் போன்றோர் மாட்டுவண்டியில் செல்வர். இந்தியாவில் பல்லக்கில் தூக்கிச் சென்றதாக அறிய முடிகின்றது. இதற்கு நல்ல உதாரணம் திருஞானசம்பந்தரை அடியார்கள் ஆலயங்களிற்குப் பல்லக்கில் தூக்கிச் சென்றமையாகும்.

இவ் யாத்திரை செல்வது என்பது ஒரு குழு சேர்ந்தே செல்லும். சிலவேளை தனித்து யாத்திரையை ஆரம்பித்தாலும் இடையிடையே அவ்வாறு செல்லும் ஏனையோரும் குழுவாக இணைந்து கொள்வர். ஆனால் போக்குவரத்து தொடர்பாடலில் மாற்றமும் முன்னேற்றமும் ஏற்பட்ட பின்னரும் ஒரு வழக்காறாக பாதயாத்திரை செல்லுதல் என்பது தொடரப்பட்டு வந்தது. அதுமட்டுமன்றி ஆரம்பத்தில் தனித்து ஒருவர் ஒரு ஊரின் ஆலயத்தை தரிசிக்கச் செல்வதென்றால் அதன் பாதையில் உள்ள பயணக் கஷ்டத்தின் காரணமாக தனியே செல்ல முடியாது. அதற்காக சிலர் சேர்ந்து நடந்து செல்வர். அது தொடரத் தொடர யாத்திரையாகியது. இது உண்மையில் ஒன்றுபட்ட சமூகத்தின் எதிர்வு கூறல் ஆகும்.

இவ்வாறு யாத்திரை முதன்மை பெறுவதற்கு உண்மையில் வழிபாடு என்பதற்கும் மேலாக நேர்த்திக்கடன் தீர்த்தல் என்பது முக்கிய காரணமாகியது. இவ்வாறான பாத யாத்திரையின் பொருட்டு யாத்திரிகர் தங்கிச் செல்லவும், அவர்களது களைப்பைப் போக்கவும், யாத்திரைத் தலங்களை முன்னிட்டும் அதற்கான பிரதான பாதைகளில் உள்ள ஆலயங்களை அண்மித்த பகுதியிலும் தெருவோரங்களிலும் இளைப்பாறு மடங்கள், சத்திரங்கள், அன்னதான மடங்கள், தாகசாந்தி நிலையங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் என்பன எழுந்தன.

யாழ்ப்பாணத்தில் பண்டைக் காலத்திலிருந்து பாதயாத்திரை என்பது தொடரப்பட்டு வந்தாலும், ஆறுமுகநாவலர் காலத்தில் இது மீள வலுப்பெற்றது எனலாம். ஏனெனில் காலனிய காலத்தில் புரொட்டஸ்தாந்து மதத்துக்கு எதிராக நாவலர் சைவசமயத்தை முன்வைத்தார். இதற்காக அவர் பிரசங்கம் செய்வது, துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவது என்பவைகளை பயன்படுத்தினார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆலயம் அமைத்தல், ஆலயத்தைப் புனிதப்படுத்தல், விளக்கிடுதல், திருநந்தவனம் அமைத்தல், பூக்கொய்து மாலை தொடுத்துக் கொடுத்தல் போன்ற சரியைத் தொண்டாகக் குறிப்பிடப்படுபவற்றை முதன்மைப்படுத்தி தொண்டன் எனும் நிலையை வலியுறுத்தியதுடன், தொண்டர்களுக்கும் அடியார்களுக்கும் அன்னமளித்தல், கொல்லாமை, ஆவினங்களைப் பாதுகாத்தல், யாத்திரை செல்லுதல் முதலியவற்றை அப்பரின் ஆரூர்த்திருத்தாண்டகம், சிறுத்தொண்ட நாயனார் போன்ற அடியார்களது வரலாறு போன்றவற்றையும் ஆதாரங்களுடன் கூறிவந்தார். இதனால் இவரது கருத்துக்களால் கவரப்பட்ட அக்கால மக்கள் பாதயாத்திரை செல்லும் வழக்கத்தை அதிகமாக கடைப்பிடிக்கத் தொடங்கினர்.

பின்னைய காலங்களில் அரசியல் பிரச்சினைகளும், பாதைகள் பயன்பாடுகள் இல்லாமை காரணமாகவும் கதிர்காம யாத்திரை செல்வது தடைப்பட்டது. முல்லைத்தீவுப் பகுதிக்குக்கூட யாத்திரை செல்ல முடியாத நிலையில் யாழ்ப்பாணத்திற்குள் சந்நிதி, ஈழத்துச் சிதம்பரம், நயினாதீவு, நல்லூர் போன்ற ஆலயங்களுக்கு யாத்திரை செல்வது அதிகரித்தது. இன்றைய சுமுகமான நிலவரத்தில் மீண்டும் இப்பாத யாத்திரை புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது.

அதாவது பிரதானமான கதிர்காம யாத்திரை மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அறிய முடிகின்றது.

புரொட்டஸ்தாந்து மதத்தால் பிளவுபட்டழிந்த சைவத்தை நாவலர் எவ்வாறு ஒன்றுதிரட்டினாரோ, அதுபோல இன்று சிதறுண்டிருக்கும் எமது சமூகத்தை ஒருங்கிணைக்க இப்பாத யாத்திரை உதவும்.

இதன் போது அடியார்கள் அல்லது பக்தர்கள் எனும் நிலையில் மக்கள் இறைநாமத்தை ஓதிய வண்ணம் தமது இனம், மொழி, மத வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நிற்பர்.

முன்னைய காலங்களில் இதற்கு பாதயாத்திரை வழிகோலியது என்பது அனைவரும் அறிந்ததே. யாத்திரையின் மூலம் ஒன்றுபட்ட சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும் என்பது திண்ணம்.

*- திருமதி. குமுதா உடயகாந்தன்*

---

# திருமண வைபவத்தின்போது இடம்பெறும் சில சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகள்

திருமண வைபவத்தின்போது தாலி கட்டி முடிந்தவுடன் மணமக்களுக்கு பால் பழம் கொடுக்கப்படுகிறதல்லவா? "நாம் இருவரும் பாலும் பழமும் போல உள்ளத்தாலும் உடலாலும் கலந்து ஒருவரையொருவர் பேணிக் காத்து இந்தப் பால்பழம் போல இன்பமாய் வாழ்வோம்" என நினைத்து மணமக்கள் ஒருவருக்கு ஒருவர் ஊட்டுவதாக இது அமைகிறது. இனி எங்கள் வாழ்வு இருவருக்கும் உரிய அந்தரங்க வாழ்வாக, மூன்றாவது ஆட்களின் தலையீட்டுக்கு இடமின்றி இருக்க வேண்டும் என்பதற்காகவே மணமக்கள் பால்பழம் அருந்தும் போது மறைப்புப் பிடிக்கப்படுகிறது.

திருமண வைபவத்தின் போது மணமக்களை அறுகரிசி போட்டு வாழ்த்துவதும் ஒரு முக்கியமான அம்சமாகும். அறுகரிசியில் முனை உடையாத பச்சரியும், மஞ்சளும், அறுகும் கலந்திருக்க வேண்டும். அரிசிதான் எம் வாழ்வுக்கு மூலாதாரமான உணவு. மஞ்சள் மங்கலத்தையும், தூய்மையையும் தருவது. அறுகு விரைவாகப் படரவல்ல மூலிகையான பூசைப்பொருள். "நீங்கள் எப்போதும் எம்மை வாழவைக்கும் அரிசி உணவுக்குக் குறைவு இல்லாமல் மற்றவர்களையும் வாழவைத்து, மஞ்சள் போல மங்கலமாய்ப் புனிதமாய், அறுகுபோல் சந்ததி விருத்திபெற்று, மூலிகையும் பூசைப்பொருளும் போல மற்றவர்கள் போற்றத்தக்கதாக வாழ்வீர்கள்" என்று வாழ்த்துவதாகவே அறுகரிசி போடுதல் அமைந்துள்ளது.

இறைவனை நினைத்துக் கொண்டு இரு கைகளாலும் சிறிதளவு அறுகரிசியை எடுத்து மணமக்களின் உச்சியில் தனித்தனி மூன்று முறை இட்டு வாழ்த்த வேண்டும். கீழிருந்து மேல், மேலிருந்து கீழ் அறுகரிசி போடுவது என்பதெல்லாம் கண்ட பாவனையிற் செய்யும் சிந்தனையற்ற செயலாகும்.

திருமண நிகழ்வில் மணமகன், மணமகளின் காலைத்தூக்கி வைத்து அம்மி மிதிப்பது என்பதிலும் அர்த்தம் உள்ளது. அம்மி கருங்கல். 'நாம் இருவரும் இந்தக் கருங்கல் போல உறுதியான கற்பு நெறியில் தவறாது வாழ்வோம்" என மணமக்கள் உறுதிபூணும் நிகழ்வாகவே இது அமைகிறது.

மணமகன் மணமகளும் மங்கலப் பொருட்கள் கொடுக்கும்போது இருவரையும் கண்ணாடியில் தனித்தனியாக தாங்களை மட்டும் பார்த்தவர்கள்.

இப்போது மாங்கல்யம், மண மாலை, மஞ்சள் குங்குமம் பூண்டு இருவரும் இணைந்திருக்கும் மங்கல கோலம் என்றும் இருவரது உள்ளங்களிலும் பசுமையாகப் பதிந்திருக்க வேண்டும். இனி எந்த வேளையிலும் நாம் இருவர் அல்ல - ஒருவர் என்ற மகிழ்ச்சிகரமான நினைவு நிலைபெற வேண்டும் என்பதற்காகவே கண்ணாடியில் பார்க்கச் செய்யப்படுகிறது.

சைவப்புலவர் சு.செல்லத்துரை

(பண்பாட்டுக் கோலங்கள் ஏன், எப்படி?)

# அமெரிக்காவில் பயங்கர சூறாவளிப்புயல்: பலி எண்ணிக்கை 13ஆக உயர்வு



அமெரிக்காவில் கடும் சூறாவளி புயல் வீசியதால், 13 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

அமெரிக்காவில் ஓஹியோ, விர்ஜினியா, கொலம்பியா, மேரி லேண்ட் உள்ளிட்ட பகுதிகளை சூறாவளி புயல் நேற்று முன் தினம் தாக்கியது.

இதில் 13 பேர் பலியாகியுள்ளனர். மின் கம்பங்கள் சாய்ந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் 30 லட்சம் மக்கள் மின்சாரம் இன்றி அவதிக்குள்ளாகியுள்ளனர்.

ரயில் பாதைகளில் மரங்கள் விழுந்து கிடப்பதால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. 20 மணி நேரம் ரயில்கள் தாமதமாக செல்வதால், ரயில் நிலையங்களில் பயணிகள் காத்து கிடக்கின்றனர்.

இல்லினாய்ஸ் பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட கைதிகள் தங்க வைக்கப்பட்ட சிறைச்சாலை சேதம் அடைந்ததால் அவர்கள் வேறு சிறைக்கு மாற்றப்பட்டனர். மேரிலேண்ட் பகுதியில் மொபைல் போன் கோபுரங்கள் சாய்ந்ததால், மொபைல் போன் சேவையும், இன்டெர்நெட் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாததால் பெட்ரோல் பங்குகள் மூடப்பட்டன.

# பிரிட்டனில் குடியேற்றத்திற்கான தேர்வில் அதிரடி மாற்றங்கள்




பிரிட்டனில் குடியேற விரும்பும் வெளிநாட்டவர்களுக்கு நடத்தப்படும் தேர்வில் மாற்றங்கள் கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளது.

இதுவரையில் இந்த தேர்வில் பிரிட்டனில் வாழ்வதற்கு உரிய நடைமுறை விடயங்களில் மட்டுமே அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்தது.

தற்போது இதனை குறைத்துக் கொண்டு, பிரிட்டனின் சரித்திரம் மற்றும் சாதனைகள் தொடர்பில் அதிக அளவு கேள்விகள் கேட்கப்பட உள்ளது.

பிரபல ஆங்கில நாடகாசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியர், நெப்போலியனை போரில் வென்ற டியூக் ஆஃப் வெலிங்டன், கவிஞர் பைரன் போன்றோர் பற்றி பிரித்தானியப் பிரஜையாக விரும்பும் வெளிநாட்டினர் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

டிரஃபால்கர் உட்பட பிரிட்டனின் சரித்திரத்தில் இடம்பெற்ற முக்கிய யுத்தங்கள், பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் செய்த முக்கிய கண்டுபிடிப்புகள், கலை மற்றும் இலக்கியத்துறையில் முக்கியப் பங்களிப்பு ஆற்றியவர்கள் ஆகியோர் பற்றி இந்தப் பரிட்சையில் கேள்விகள் கேட்கப்படும்.

இந்த தேர்வு 2005ஆம் ஆண்டு தொழிற்கட்சி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 45 நிமிடங்கள் நடக்கக்கூடிய இந்த தேர்வு ஐக்கிய ராஜ்ஜியத்தில் 90 மையங்களில் எழுதலாம்.

புதிய பாடத்திட்டத்துடன் கூடிய தேர்வு ஆயத்த புத்தகம் இன்னும் சில மாதங்களில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜப்பான் சிறுவர்களின் உடலில் ஆபத்தை விளைவிக்கும் கதிரியக்கம் கண்டுபிடிப்பு



ஜப்பான் புகுஷிமா அணு உலை விபத்து ஏற்பட்ட இடத்தில் வசிக்கும் சிறுவர்களுக்கு, உடலில் கதிரியக்கம் கொண்ட சீசியம் இருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்களை இந்த ஆய்வுக்கு உட்படுத்தியதில் 141 சிறுவர்களின் சிறுநீரில் சீசியம் இருப்பது தெரிய வந்ததாக ஜப்பானில் உள்ள ஐசோடோப் ஆராய்ச்சி கல்வி நிறுவனம் தெரிவித்தது.

இந்த சோதனையில் 3 பேரின் சிறுநீர் மாதிரிகளில் 10 பெக்கியூரெல்ஸைக் கும் (கதிரியக்கத்தை அளவிடும் அலகு) அதிகமாக இருந்தது என்றும், 130-க்கும் அதிகமான சிறுவர்களுக்கு 10 பெக்கியூரெல்ஸுக்கும் குறைவாக உள்ளது என்றும் ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதேபோல் மாதிரிகளில் 64 பெக்கியூரெல்ஸ் கதிரியக்கம் கொண்ட பொட்டாசியம் உள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரிகளில் பொட்டாசியத்தின் அளவை விட சீசியத்தின் அளவு குறைவாகத்தான் உள்ளது. அதனால் உடலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று டோக்கியோ பல்கலைக் கழக உணவுப் பாதுகாப்புத் துறை பேராசியர் ஹிதேகி கார்கி தெரிவித்தார்.

ஆனால் இந்த சீசியம் எவ்வாறு சிறுவர்களின் உடலுக்குள் சென்றது என்பது குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சீசியத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் காய்கறிகளைத் தான் உட்கொள்கின்றனர். ஒருவேளை காய்கறிகளின் மூலம் சிறுவர்களுக்கு பாதிப்பு வந்துள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்தாண்டு மார்ச் மாதம் புகுசிமாவில் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமியால் அங்குள்ள அணுமின் நிலையத்தில் அணுக்கசிவு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஹொங்கொங்கில் சீன ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் போராட்டம்



ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் நியமன விழாவில் பங்கேற்ற சீன ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன் கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங் குத்தகைக் காலம் முடிந்ததையொட்டி, கடந்த 1997ஆம் ஆண்டு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

சீனாவிடம் ஹொங்கொங் ஒப்படைக்கப்பட்ட 15ஆம் ஆண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி ஹொங்காங் நிர்வாகத் தலைவர் நியமனமும் நடந்தது.

செல்வந்தரான லியுங் சுன் யிங், ஹொங்கொங் நிர்வாகத் தலைவராக பொறுப்பேற்றார். இவ்விழாவில் சீன ஜனாதிபதி ஹு ஜின்டாவோ பங்கேற்றார்.


ஜின்டாவோ உரையாற்றிக் கொண்டிருந்த போது, இந்த விழாவில் பங்கேற்றவர்கள் "ஹொங்கொங்குக்கு அதிக ஜனநாயக உரிமை அளிக்கப்பட வேண்டும். ஹொங்கொங் உள்விவகாரத்தில் சீனா அதிகம் தலையிடக் கூடாது" என கோஷமிட்டனர். சீனாவுக்கு எதிராக சிலர் ஊர்வலமும் நடத்தினர்.

பின் பேசிய ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் லியுங் குறிப்பிடுகையில், எனக்கு அளிக்கப்பட்ட இந்த பொறுப்பை நல்லபடியாக நிறைவேற்றுவேன். நான் ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக செயல்படுகிறேன் என்ற குற்றச்சாட்டை மறுக்கிறேன் என்றார்.

ஹொங்கொங் நிர்வாகத் தலைவராக இருந்த டொனால்டு டிசாங், தனது பொறுப்புகளை லியுங்கிடம் ஒப்படைத்தார்.

# உலக பார்வை

## 25,000 பேரை பலிகொண்ட எரிமலை மீண்டும் குமுறுகிறது



கொலம்பியா நாட்டில் தலைநகர் போகோதாவுக்கு 180 கிலோ மீற்றர் தொலைவில் ஆன்டியன் மலைத்தொடரில் நிவாடோ டெல் என்ற எரிமலை அமைந்துள்ளது.

இந்த எரிமலை கடந்த 1985ஆம் ஆண்டு குமுறி அக்கினியை கக்கியதில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர். சுமார் 5 ஆயிரம் பேர் காயத்துடன் உயிர் தப்பினர்.

தற்போது இந்த எரிமலை மீண்டும் குமுற தொடங்கியுள்ளது. அதில் இருந்து புகையும், சாம்பலும் வெளிவருகிறது.

இதனால் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 4,800 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள்.

இது குறித்து ஜனாதிபதி ஜுயன் மானுவேல் சந்தோஸ் வெளியிட்ட அறிக்கையில், இது அபாயகர பகுதியாகும். எனவே அங்கு வசிக்கும் மக்கள் உடனே வெளியேற வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.



வத்திக்கான் புனித பீட்டர் சதுக்கத்தில் பிரார்த்தனை நிகழ்வில் பங்கேற்ற போப் பதினாறாம் பெனிடிக்.

## சந்தேகப்படும் கணவன்மார்கள்: ஈராக்கில் மனைவிகளுக்கு கன்னித் தன்மை பரிசோதனை



ஈராக் நாட்டில் கணவனின் சந்தேகத்திற்கு ஆளாகும் பெண்கள், கன்னித் தன்மை பரிசோதனைக்கு ஆளாகின்றனர், இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

ஈராக் நாட்டில் திருமணம் நடக்கும் வரை ஒரு பெண் கன்னித் தன்மையோடு இருக்க வேண்டும் என்பதில், மணமகன் வீட்டார் உறுதியாக உள்ளனர்.

திருமணத்திற்கு பின்பு மனைவி மீது கணவனுக்கு சந்தேகம் எழுந்தால், ஒரு கட்டத்தில் அவர் நீதிமன்றத்திற்கு செல்கிறார்.

நீதிமன்றமும் சம்பந்தப்பட்ட பெண்ணின் கன்னித் தன்மையை பரிசோதிக்க உத்தரவிடுகிறது. கன்னித் தன்மையை பரிசோதிக்க, பாக்தாத்தில் பரிசோதனை நிலையங்கள் ரகசியமாக இயங்கி வருகின்றன.

இவர்கள் சம்பந்தப் பட்ட பெண்ணின் கன்னித் தன்மையை பரிசோதித்து, அந்த அறிக்கையை நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கின்றனர். இந்த அறிக்கையின் அடிப்படையில் தான் நீதிமன்றமும் தீர்ப்பளிக்கிறது.

பெண்ணுக்கு கன்னித்திரை பல்வேறு காரணங்களால் கிழியலாம். அதை வைத்து அந்த பெண்ணின் கற்பை சந்தேகிக்க முடியாது என மருத்துவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

எனவே கன்னித் தன்மையை பரிசோதிக்கும் நடவடிக்கைக்கு, தடை விதிக்க வேண்டும் என ஈராக்கிய பெண் உரிமை சங்கத்தினர் போராடி வருகின்றனர்.

## அல்கெய்தாவின் தாக்குதலை முறியடிக்க லண்டனில் 6 இடங்களில் தயாராகி வரும் ஏவுகணை தளம்

லண்டன் ஒலிம்பிக் போட்டியின் போது விமான தாக்குதல் நடத்தப்படும் என்ற அல்கெய்தா தீவிரவாதிகளின் மிரட்டலை தொடர்ந்து 6 இடங்களில் ஏவுகணை தளம் அமைக்கப்பட உள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் வருகின்ற 27ம் திகதி முதல் ஒகஸ்ட் 12ம் திகதி வரை ஒலிம்பிக் போட்டி நடைபெற உள்ளது. நிகழ்ச்சியின் போது அமெரிக்க பயணிகளின் ஜெட் விமானத்தை தகர்க்க அல்கொய்தா தீவிரவாதிகள் சதி திட்டம் தீட்டியுள்ளனர்.

இந்த தகவலை உறுதி செய்த பிரிட்டன் உளவு துறை, பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தியுள்ளது.

விமானத்தை கடத்தி தாக்குதல் நடத்த திட்டமிட்டிருக்கும் அல்கொய்தா தீவிரவாதிகளின் சதியை முறியடிக்க பிரித்தானிய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

அதற்காக லண்டனில் 6 இடங்களில் ஏவுகணை தளங்கள் அமைக்கப்பட உள்ளன.

# கருணை மனுக்களின் மீது முடிவெடுப்பது மிகவும் கடினமானது: ஏ.பி.ஜெ.அப்துல் கலாம்

மரண தண்டனை கைதிகளின் கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பது நாட்டின் ஜனாதிபதிக்கு மகிழ்ச்சியான பணி அல்ல என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கலாம் தான் எழுதிய டர்னிங் பாயிண்ட்ஸ் என்ற புத்தகத்தில் கூறியிருப்பதாவது: குற்றத்தின் தன்மை, குற்றத்தின் கடுமை, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் சமூக, பொருளாதார நிலைமை போன்றவற்றை ஒரு சாதாரண குடிமகனின் நிலையில் இருந்து பரிசீலிக்க வேண்டும் என நான் நினைத்தேன்.

விசாரணை நீதிமன்றத்தில் வழங்கப்படுகிற தூக்குத் தண்டனைகள் அனைத்தும் உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றங்களில் உறுதி செய்யப்பட்ட நிலையில், அதை ஜனாதிபதி உறுதி செய்வது என்பது மிகவும் கடினமான பணி ஆகும்.

ஜனாதிபதி மாளிகையில் பல ஆண்டுகளாக இப்படி ஏராளமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. இது, எந்தவொரு ஜனாதிபதியும் மகிழ்ச்சியுடன் முடிவு எடுக்கக்கூடிய பணி அல்ல.


கடந்த 1990ஆம் ஆண்டு கொல் கத்தாவில் 14 வயது சிறுமியை கற்பழித்து கொன்ற தனஞ் சாட் டர்ஜிக்கு மரண தண்டனையை உறுதி செய்தேன்.

இவர், 2004ஆம் ஆண்டு ஓகஸ்டு 14ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார்.

மரண தண்டனையை எதிர்த்து போடப்படுகிற மேல் முறையீட்டு வழக்குகளை நீதிமன்றங்கள் விசாரிக்கிறபோது, தண்டிக்கப்படுகிற கைதியின் வாழ்வாதார நிலை, அவரது குடும்பத்தின் நிலை ஆகிய வற்றை சட்ட அமுலாக்க அதி காரிகள் (பொலிஸ்) புத்திசாலித்தனமாக கண்டறிய உஷார்ப்படுத்த வேண்டும்.

இத்தகைய ஆய்வு, குற்றவாளி எந்த நோக்கத்தில் குற்றத்தை செய்தார் என்பதை தெளிவாக தெரிய வைத்துவிடும். நாம் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள்.

இந்நிலையில், செயற்கையாக அல்லது உருவாக்கப்பட்ட ஒரு




சாட்சியத்தின் அடிப்படையில் ஒரு உயிரை எடுப்பதற்கு எந்தவொரு மனித அமைப்போ அல் லது மனிதரோ தகுதியானவர்கள் என்று என்னால் உறுதியாக கருத இயலவில்லை.என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.ஏ.எஸ் பயிற்சி மாணவர்களுக்கு உதவியைத் தொகையை உயர்த்த தமிழக முதல்வர் உத்தரவு



தமிழ்நாடு, சென்னை அண்ணா நகரில், தமிழக அரசால் அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி மையத்தின் மூலம் தமிழகத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் பயிற்சி பெற்று, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வில் [illegible]றிப் பெற்று அரசு உயர் அதிகாரிகளாக நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

இப்பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று வரும் மாணவ, மாணவியருக்கான உணவுக் கட்டணத்தை ரூ.2000 ஆக உயர்த்தியும், இனி வருங்காலங்களில், உணவுக் கட்டணத்தை ஆண்டு தோறும் ஐந்து விழுக்காடு உயர்த்துவற்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அரசின் அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் மாணவ, மாணவியர் மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் .ஒவ்வொரு ஆண்டும் நடத்தப் படும் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, முதன்மைத் தேர்வில் பங்கு கொண்டு வெற்றி பெற்று, புதுடெல்லியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், ஊக்கத் தொகையாக மாதம் ஒன்றுக்கு 'ரூ.3000 வீதம் 3 மாதங் களுக்கு 200 மாணவ, மாணவி யர்களுக்கு வழங்கவும் தமிழக முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். இதுமட்டுமின்றி, புது டெல்லியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் பங்குகொள்ளும் பயிற்சி யாளர்களுக்கு, பயணச் செலவினமாக தலா 'ரூ.2000 வழங்கவும் தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அரசின் இந்த தொலைநோக்கு நடவடிக்கைகளினால், தமிழக மாணவ மாணவியர் அதிக அளவில் அகில இந்திய குடிமை பணிகளுக்கு தெரிவு செய்யப்படும் நிலை உருவாகும் வாய்ப்புள்ளது.

# இந்தியா மன்னிப்பு கேட்க வேண்டும்: பாகிஸ்தான் அமைச்சர்

இந்தியாவிற்காக பாகிஸ்தானில் உளவு பார்த்த சுர்ஜித் சிங் விடயத்தில் இந்தியா மன்னிப்புக் கேட்க வேண்டுமென பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மாலிக் கூறியுள்ளார்.

லண்டனில் பேட்டியளித்ததாக பாகிஸ்தான் பத்திரிகை வெளியிட்டுள்ள அந்த செய்தியில் மாலிக் கூறியிருப்பதாவது: சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட சுர்ஜீத்சிங் போல இன்னும் எத்தனை உளவாளிகளை பாகிஸ்தானுக்கு இந்தியா அனுப்பியுள்ளது என்பதை தெரிவிக்க வேண்டும்.

சுர்ஜீத்சிங் பாகிஸ்தானில் உளவு பார்த்தமைக்கு இந்தியா மன்னிப்பு கேட்க வேண்டும் என்று மாலிக் தெரிவித்தார்.

உளவு பார்த்த குற்றத்திற்காக பாகிஸ்தானில் 30 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த சுர்ஜீத் சிங், கடந்த வாரம் விடுதலை



செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆதரவு திரட்ட ஆந்திரா சென்றார் பிரணாப் முகர்ஜி

ஜனாதிபதி வேட்பாளர் பிரணாப் முகர்ஜி, தேர்தல் பிரசாரத்தின் ஒரு பகுதியாக தனி விமானம் மூலம் நேற்று ஆந்திரா சென்றார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி வேட்பாளர் பிரணாப் முகர்ஜி நேற்று ஆந்திரா காங்கிரஸ் சட்டமன்ற, ,நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பிற்கு பிறகு நிருபர்களிடம் பேசிய பிரணாப், தனக்கு ஆதரவு தந்த அனைத்து கட்சிகளுக்கும் நன்றி தெரிவித் துக்கொள்கின்றேன்.

இதுவரை ஆதரவு தராத கட்சிகள் ஆதரவு தரும் படியும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

மற்றொரு வேட்பாளரான பி.ஏ. சங்மா அதிசியம் நிகழ்ந்தால், தான் ஜனாதிபதியாகலாம் என்று தெரிவித்துள்ளது பற்றி நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதி லளித்த பிரணாப், அதிசியம் நிகழுமா என்பது குறித்து எனக்கு



தெரியாது.

அதிசியங்களில் எனக்கு நம்பிக்கையில்லை என்று கூறினார்.




# இந்திய செய்திகள்

## பொலிவுட் நடிகை இஷாதியோலை வீருந்துக்கு அழைத்தார் சோனியா

திருமணத்திற்கு நேரில் வந்து வாழ்த்து சொல்ல இயலாத நிலையில், பொலிவுட் நடிகை இஷதியோல் தம்பதியை தன் வீட்டுக்கு இரவு விருந்துக்கு வருமாறு, காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா அழைத்துள்ளார்.

இந்தி திரைப்பட உலகின் முன்னாள் கனவுக்கன்னியும், பா.ஜ., - எம்.பி.,யுமான ஹேமமாலினியின் மகளும், தற்போது பாலிவுட் நடிகையுமான இஷாதியோல் - தொழிலதிபர் பரத் திருமணம், கடந்த 29ஆம் தேதி, மும்பை 'இஸ்கான் கோவிலில் நடந்தது. திருமண வரவேற்பு நிகழ்ச்சி, மும்பையில் நடந்தது.இந்த திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள, காங்கிரஸ் கட்சித் தலை வர் சோனியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், பாதுகாப்பு உட்பட பல்வேறு கார ணங்களால் அவரால் திருமணத் தில் கலந்து கொள்ள இயல வில்லை. இந்நிலையில், மணமக்களை டில்லியில் உள்ள தன் இல்லத்தில் இரவு விருந்துக்கு வருமாறு சோனியா அழைத்துள்ளார்.

இதுகுறித்து மணமகளின் தாயும், பா.ஜ., - எம்.பி.,யுமான ஹேமமாலினி நேற்று கூறுகையில், "காங்கிரஸ் கட்சித் தலைவரும்



ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவருமான சோனியாவை திருமணத்தில் கலந்து கொள்ள வருமாறு அழைத்தோம்.

ஆனால், பாதுகாப்பு உட்பட பல்வேறு காரணங்களால் அவரால் திருமணத்தில் பங்கேற்க இயலவில்லை. மண மக்கள் எப்போது டில்லிக்கு வருகின்றனரோ அப்போது தனது இல்லத்தில் இரவு விருந்துக்கு வருமாறு சோனியா அழைத்துள்ளார்" என்றார்.



பஞ்சாப், அமிர்தசரசில், மூளை செயல்திறன் குறைந்த குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில், உடல் ஒட்டிப் பிறந்த சோகன் சிங் மற்றும் மோகன்சிங் ஆகியோர், தற்காப் புக் கலையை ஆர்வத்துடன் கற்றுக் கொண்ட போது எடுத்த படம்.

## ஊதியம் வழங்காத குற்றச்சாட்டு: 200 கிங்பிஷர் விமானிகள் வேலை நிறுத்தம்

விமானிகளுக்கு 5 மாதங்களாக ஊதியம் வழங்காததை கண்டித்து கிங்பஷர் நிறுவனத்தின் 200க்கும் மேற்பட்ட விமானிகள் மற்றும் தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், கிங்பிஷர் நிறுவனத்தின் தலைவர் விஜய் மல்லையாவிடம், விமானிகள் ஊதியம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினர்.



இதில் எந்த முடிவும் எடுக்கப்படாததால் விமானிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஊதியம் குறித்து அடுத்தகட்ட நடவடிக்கையாக விமானிகள் மற்றும் ஊழியர்கள் நாளை பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

# ஜெயரெட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம் இரண்டாவது சுற்றில் வை.எம்.எச்.ஏ.

வலிகாமம் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழகம்.

வீ.டி.ஜெயரெட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் 9 ஆவது ஆண்டாக யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியை நடத்தி வருகின்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதய தாக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழகம் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதர்சன் 6 சிக்ஸர்களுடன் 48 ஓட்டங்களையும் அனோஜன் 5 பௌன்டறிகளுடன் 42 ஓட்டங்களையும் இராஜேந்திரம் ஆட்டம் இழக்காமல் 33 ஓட்டங்களையும் தேசிகன் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

உதிரிகளாக 30 ஓட்டங்கள் பெறப்பட்டது.

திருநெல்வேலி கிரிக்கட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுரேந்திரன் 8 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் அசோக் 6 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும அருள்ராஜ் கபில்ராஜ் முறையே 17, 35 ஓட்டங்களைக் கொடுத்த தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

217 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் 33.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் சார்பில் துடுப்பெடுத்தாடிய சுரேந்திரன 23 ஓட்டங்களையும் சிவராஜ் 22 ஓட்டங்களையும் அருள்ராஜ் 16 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 27 ஓட்டங்களும் பெறப்பட்டன.

திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சயந்தன் 8 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிசாந்தன் 7 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் அனோஜன் 7.5 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிலோஜன் 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

# வடமாகாண தடகளப் போட்டி நாளை கோலாகல ஆரம்பம்

வலிகாமம்

வட மாகாண கல்வித்திணைக் களத்தால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் வீர,வீராங்கனைகளுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகின்றன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

வட மாகாண கல்வி, பண்பாட்டு அலுவலகள் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசிலன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்துகொள்ள வுள்ளார்

யாழ். மாவட்டப் பாடசாலைகளான யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய ஆறு பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியம் மற்றும் சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளுடன் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

மைதானத்தில் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முதல் தடவையாக யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கடேற் வீரர்கள் மைதானக் கடமையில் ஈடுபடவுள்ளார் கள்.

ஆரம்ப நிகழ்வில் இதுவரை இடம் பெற்று முடிந்த 2012 ஆம் அண்டுக்கான 55 பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் இடங்களை பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கான வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டதைச் சேர்ந்த சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட அணிகளின் அனைத்து வீரர்களும் கலந்துகொள்வதுடன் வெளி மாவட்டங்களில் இருந்து சம்பியன் வென்ற அணிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (என்)

# தேசிய கபடிக் குழுவில் யாழ். வீரர்கள் இருவர்

வலிகாமம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய மட்டத்திலான கபடிக் குழுவில் யாழ். மாவட்டத்தைச் சோந்த இருவர் இணைத்துக் கொள்வதற்க்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களான ச.சுஜன் மற்றும் சி.செந்துரான் ஆகிய இருவருமே கடந்த மாதம் தேசிய மட்டத்தில் இடம் பெற்ற கபடிப் போட்டியில் யாழ். மாவட்ட அணி சார்பில் கலந்து கொண்ட வீரர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள் ளார்கள்.

இவர்கள் பாடசாலை மட்டத்திலான போட்டிகளிலும் சிறந்து விளங்கியவாகள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (என்)

# யூரோக் கிண்ணம் ஸ்பெய்னிடம்



யூரோக் கிண்ணத்தை தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் கைப்பற்றி சாதனை படைத்தது ஸ்பெய்ன் அணி.

உக்ரைனில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெய்ன் இத்தாலி அணிகள் மோதின.

பேரம் எதிர்பாரப்புடன் ஆரம்பித்த இப்போடடியில் ஸ்பெய்ன் அணி 4-0 என்ற கோல்கள் அடிப்படையில் இத்தாலியை வீழ்த்தி யூரோ சம்பியன் வென்றது.

# காலிறுதியில் முர்ரே, பெரர்

விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுக்கு, இங்கிலாந்து வீரர் ஆண்டி முர்ரே முன்னேறினார்.

லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே, சைப்ரசின் மார்காஸ் பாக்டாடிசை சந்தித்தார். முதல் செட்டை 7-5 என போராடி கைப்பற்றிய முர்ரே, இரண்டாவது செட்டை 3-6 எனக் கோட்டைவிட்டார். பின் எழுச்சி கண்ட முர்ரே அடுத்த இரண்டு செட்டை 7-6, 6-1 என தன்வசப்படுத்தினார். இறுதியில் முர்ரே 7-5, 3-6, 7-6, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். இன்று நடக்கவுள்ள நான்காவது சுற்றில் முர்ரே, குரோஷியாவின் மரின் சிலிக்கை சந்திக்கிறார்.

வெளியேறினார் ரோடிக்

மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் அன்ரி ரோடிக், ஸ்பெயின் வீரர் டேவிட் பெரரை சந்தித்தார். இதில் ரோடிக் 6-2, 6-7, 4-6, 3-6 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார். நான்காவது சுற்றில் டேவிட் பெரர், ஆர்ஜென்ரீனாவின் ஜுயன் மார்டின் டெல் போட்ரோவை எதிர்கொள்கிறார்.

ஆண்கள் பிரிவில் நடந்த மூன்றாவது சுற்றுப் போட்டிகளில் ஆர்ஜென்ரீனாவின் ஜுயன் மார்டின் டெல் போட்ரோ, பிரான்சின் ஜோ-வில்பிரிட் டோங்கா, குரோஷியாவின் மரின் சிலிக், அமெரிக்காவின் மார்டி பிஷ், பிரைன் பாகர் ஆகியோர் வெற்றி பெற்று நானகாவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.



வடமாகாண கல்வித்திணைக் களத்தால் முதல் தடவையாக நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கராத்தே போட்டியில் முதலிடம் வென்ற கைதடி நவீல்ட் பாடசாலை வீராங்கனை கள் பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்களுடன்.

# இரண்டாவது போட்டியில் இங்கிலாந்திற்கு வெற்றி

அவுஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கு மிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது. இலகுவான வெற்றியாக அமைந்த இப்போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

லண்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. மத்திய ஓவர்களில் மெதுவாக ஓட்டங்களைப் பெற்ற அவ்வணியால் தேவையானளவு ஓட்டங்களைப் பெற முடியாது போனது.

252 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் நடைபெற்று முடிந்த 2 போட்டிகளின் நிறைவில் இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# இளையோர்க்கான ஆசியக் கிண்ணம் இந்தியா-பாகிஸ்தான் இணைந்து




இளையோர்க்கான ஆசியக்கிண்ணத்தை கூட்டாகக் கைப்பற்றின இந்திய, பாகிஸ்தான் அணிகள். ஆசியக் கிரிக்கெட் சம்மேளனம் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணப்போட்டியை மலேசியாவில் நடத்தியது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத்தில் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பாகிஸ்தான் பின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது.

பாகிஸ்தான் சார்பில் துடுப்பெடுத்தாடிய சமி அஸலாம் 134 ஓட்டங்களையும் உமர் வஹிட் 48 ஓட்டங்களையும் சாட் அலி 23 ஓட்டங்களையும் பெற்றனர். இந்தியா சார்பில் பந்து வீசிய ரஸ் கலாரியா 37 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் சன்டீப்சர்மா, அபரஜீத், விகாஸ் மிஸ்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய இளையோர் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. இறுதிப் பந்தில் ஒரு ஓட்டம் தேவைப்பட்ட நிலையில் விக்கெட்டை இழந்தது. இதனால் ஆட்டம் சமனில் முடிவடைந்தது.

இந்திய அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய அணியின் தலைவர் உன்முக்த் சங் 121 ஓட்டங்களையும் அபரஜித் 90 ஓட்டங்களையும் அக்ஸடிப் நாத் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தான் சார்பில் பந்துவீசிய மெஹமட் நவாஸ், எஸான் அடில் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சியா உல்-ஹக் 2 விக்கெட்டுக்களை யும் கைப்பற்றினர்.

இப்பத்திரிகை இன்:.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 03.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது